Book 13

# புதிய நினைவூட்டல்

மாத இதழ்

# உலகம் முடிவுறும்

# வருடம் 2280



செப்டம்பர்
2000
September

**PUTHIYA NINAIVOOTAL**
TAMIL MONTHLY

# எளிய உண்மைகள்

**இறுதி இறைவேதமான அல்குர்ஆன் உலகின் வேறு எந்தப் புத்தகத்திலும் காணப்படாத, தனித்தன்மையான, அற்புதமான அமைப்பில் அமைக்கப்பட்டுள்ளது. அதில் உள்ள ஒவ்வொரு விஷயமும் 19 என்ற எண்ணின் அடிப்படையில் அற்புதமாக அமைக்கப்பட்டுள்ளது. இது, இறைவன் குர்ஆனில் 74:23-31வசனங்களில் கூறுவது போல இக்கட்டமைப்பு குர்ஆன் மனிதர்களின் சொல் அல்ல என்று நிரூபிப்பதாகவும், நம்பிக்கையாளர்களின் நம்பிக்கையை அதிகரிப்பதாகவும், நயவஞ்சகர்களை வெளிப்படுத்துவதாகவும் அமைந்துள்ளதை அறிவுடையோர்கள் கண்கூடாகக் கண்டு கொள்ளலாம்.. 74:35ல் இறைவன் கூறுவதைப் போல் இது ஒரு மிகப்பெரியஅற்புதமாகவும் அமைந்திருப்பதை அறிந்து அதிசயிக்கலாம், மேலும் இக்கட்டமைப்பு அல்குர்ஆனின் ஒவ்வொரு எண்ணையும் எழுத்தையும் பாதுகாக்கும் வேலையை தொடர்ந்து செய்யக் கூடியதாகவும் உள்ளதை அறிந்து வியக்கலாம் .**

1. குர் ஆனின் முதல் வசனமான பிஸ்மில்லாஹிர்ரஹ்மானிர்ரஹீம் என்பதில் இடம் பெறும் அரபி எழுத்துக்கள் .......................................................................... 19
2. குர்ஆன் 114 சூராக்களை கொண்டது 114 = ....................................................... 19x6
3. குர் ஆனின் மொத்த வசனங்களின் எண்ணிக்கை 6346 ........................................ 19x334
   (அதில் எண்ணிடப்பட்டது 6234, எண்ணிடப்படாதது 112 (பிஸ் மிக்கள்)
   6234 + 112 = 6346 கவனிக்க 6+3+4+ 6 = ............................................................19
4. 'பிஸ்மில்லாஹ்' குர் ஆனில் 114 முறை உள்ளது 114 .............................................19X6
   ( சூரா 9ல் பிஸ்மி இல்லாவிட்டாலும் 19 சூராக்கள் தள்ளி 27வது
   சூராவில் இரு முறை உள்ள) சூரா 27 வசனம் 30 ஆக 27+30 = 57.......................... 19x3
5. பிஸ்மில்லாஹ் இல்லாத சூரா 9ற்கும் பிஸ்மில்லாஹ் இருமுறை
   இடம் பெறும் சூரா 27க்கும் இடையில் இடம் பெறும் சூராக்கள்............................19
6. பிஸ்மி இல்லாத சூரா 9 முதல் பிஸ்மி இருமுறை இடம் பெறும்
   சூராவான 27 வரை கூட்டினால் (9+10+11.... 27) வரும் கூட்டுத்தொகை 342 = .....19x18
7. இதில் முக்கிய விஷயம் என்ன வென்றால் இருமுறை பிஸ்மி
   இடம் பெறும் சூராவில் முதல் பிஸ்மிக்கும் இரண்டாம்
   பிஸ்மிக்கும் இடையில் உள்ள வார்த்தைகள் சரியாக அதே 342 = .........................19x18
8. புகழ்பெற்ற முதல் வஹீ (96:1 முதல் 5) யில் இடம் பெறும்
   வார்த்தைகள் சரியாக ........................................................................................ 19
9. 19 வார்த்தைகள் கொண்ட அந்த முதல் வஹீயில் இடம் பெறும்
   எழுத்துக்கள் சரியாக 76 ........................................................................... 19x4
10. இறக்கப்பட்ட வரிசையில் முதல் சூராவான 96ல் இடம் பெறும் வசனங்கள் ...........19
11. இந்த சூரா, இடது புறத்திலிருந்து புரட்டினால் வருவது ..............................19வது இடத்தில்
12. 96ம் சூரா முழுதும் இடம்பெறும் எழுத்துக்கள் 304 ............................................. 19x16
13. இறுதி வஹீயான சூரா 110ல் இடம் பெறும் வார்த்தைகளும் சரியாக .................... 19
14. கடைசி வெளிப்பாட்டின் (சூரா 110:1) முதல் வசனத்தில் இருப்பது ............ 19 எழுத்துக்கள்
15. 29 சூராக்களின் ஆரம்பங்களில் வரும் 14 எழுத்துக்கள் கொண்டு அமைக்கப்பட்ட
    14 வகையான முத்திரை எழுத்துக்கள் (உம்) அலிப், லாம், மீம்) இவற்றைக்
    கூட்ட 29+14+14 = 57 = .......................................................................... 19x3
16. முத்திரை எழுத்துக்கள் அமைந்த 29 சூராக்களின் சூரா எண்களைக் கூட்ட
    (2+3+7+ ...... + 50+ 68) = 822 அத்துடன் 14 ஐக் கூட்ட (அதாவது 14 வகைகள்)
    = 822+14 = 836 = ...............................................................................................19x44
17. முத்திரை எழுத்து கொண்ட முதல் சூராவான 2க்கும் முத்திரை
    எழுத்து கொண்ட கடைசி சூராவான 68க்கும் இடையில்
    முத்திரை எழுத்து இல்லாத சூராக்கள் 38 உள்ளன ............................................. 19x2
18. முதல் முத்திரை சூராவிலிருந்து கடைசி முத்திரை சூரா வரை முத்திரையிட்டதும்
    முத்திரையிடாதது மாக மாறி மாறி வருவது ............................................. 19 விதமாக
19. குர்ஆனில் 30 எண்கள் குறிப்பிடப்படுகின்றன. அவை 1, 2, 3,
    4, 5, 6, 7, 8, 9, 10, 11, 12, 19, 20, 30, 40, 50, 60, 70,
    80, 99, 100, 200, 300, 1000, 2,000, 3,000, 5,000,
    50,000 & 1,00,000 இந்த எண்க ளின் கூட்டுத் தொகை 1,62,146 ......................... 19x8534

மிக்க அருளும் மிக்க அன்பும் உடைய இறைவனின் பெயரால்.

இந்த மக்கள் பேசும் பேச்சுக்களை நாம் நன்கறிகின்றோம்.இவர்களை நிர்பந்தப்படுத்தி ஏற்கச் செய்வது உமது பணியல்ல என் எச்சரிக்கைக்கு அஞ்சுகின்ற ஒவ்வொருவருக்கும் நீர் இந்த குர்ஆனைக் கொண்டு அறிவுரை கூறுவீராக! (50:45)

# புதிய நினைவூட்டல்

ஓர் உலகம் ஓர் இறை ஒரே செய்தி

செய்தி 1 | செப்டெம்பர் 2000 | நினைவு 8

குறிப்பு:- உண்மையான இறையச்ச முடையவர்களே மேம்போக்காக எதையும் படிக்காமல் வசன எண்களை உங்களிடமுள்ள குர்ஆனை ஒப்பிட்டு பார்த்து சிந்தித்து விளங்கிக் கொள்ளுங்கள்.

ஆசிரியர் :
C.S. ரஃபியுத்தீன்

துணை ஆசிரியர் :
N.A. அஹமது ஹுஸைன்

தனிச்சுற்று இதழ்

சந்தா விபரம்

உள் நாடு ஓராண்டு ரூ. 60.00

தனி பிரதி ரூ. 5.00

புதிய நினைவூட்டல் மாத இதழ்

அலுவலகம்

இதழின் உள்ளே

* உலக முடிவு
* இறைவனுக்கு அறிமுகம் தேவையா?
* இரும்பு எஃகு அல்குர் ஆனின் அதி அற்புதம்
* இறைவனுக்கு அறைகூவல் விடுக்கும் முஹம்மதியர்கள்
* நேருக்கு நேர்
* ஹதீஸ் ஆதரவாளர்களின் வாதங்களுக்கு பதில்கள்
* 17:46க்கு அர்த்தம்- அனர்த்தம்

## குர்ஆன் கூறும் உலகம் முடிவுறும் இறுதி வருடம்

# உலக முடிவு

கடந்த ஜுன் மாத இதழில் நாம் வரவிருக்கும் இறுதி நாளின் அடையாளமான 'புகை' (துகான்) வேதனை குறித்த தகவல்களைக் கண்டோம். இனி இறுதிநாளின் மற்றொரு அறிகுறியான யஃஜுஜ் மஃஜுஜ் சமூகத்தாரின் மறுவருகை குறித்து சில தகவல்களைக் காண்போம்.

இத்தீய சமூகத்தார் இறைவனின் திட்டத்திற்கேற்ப ஹிஜ்ரி 1700வது வருடம் (2271 A D ) மீண்டும் வருவார்கள். யஃஜுஜ் மஃஜுஜ் (Gog and Megog) சமூகத்தாரைக் குறித்து 18:94 மற்றும் 21:96 ஆகிய வசனங்களில் குறிப்பிடப்படுகிறது. 18:94லிருந்து 18வது அத்தியாயத்தின் இறுதி வசனம் வரை எண்ணினால் நீங்கள் 17வசனங்கள் என்று அறிவீர்கள். அதுபோல் 21:96லிருந்து 21வது அத்தியாயத்தின் இறுதி வசனம் வரை எண்ணினாலும் நீங்கள் அதே 17ஐக் காண்பீர்கள். இது யஃஜுஜ் மஃஜுஜ் என்னும் தீய சமூகத்தார் ஹிஜ்ரி 17வது நூற்றாண்டில் மீண்டும் தோன்றுவார்கள் என்பதற்குரிய குர்ஆன் காட்டும் அறிகுறியாகும்.

உலக முடிவு நாள் குறித்து ஆங்காங்கே பலரும் ஆருடம் கூறுவது நாம் நன்கறிந்த ஒன்றே. ஜப்பானிலும் அமெரிக்காவிலும் இரு குழுக்கள் தங்கள் தலைவர்கள் 'உலகம் இறைவனால் அழிக்கப்படப் போகிறது. அதற்கு முன் நாம் இறைவனின் திருவடி சென்றடைவோம்' என்று கூறியதால் நூற்றுக்கும் மேற்பட்டோர் கூட்டுத் தற்கொலை செய்து கொண்டது மிகச் சமீபத்தில் செய்தித்தாள்களில் நாம் கண்ட விஷயம்.

கிறித்துவர்களில் ஒரு பிரிவினர் 2000ல் உலகம் அழியும் என்று எதிர்பார்த்து ஏமாந்ததும் சமீபத்திய சம்பவமே. இன்னும் பலரும் உலகம் இப்போது அழியும், அல்லது அப்போது அழியும், இவ்வாறு

அழியும், அல்லது அவ்வாறு அழியும் என்று ஆருடம் கூறி வருகின்றனர். இவற்றில் பல காலத்தால் பொய்ப்பிக்கப்பட்டு விட்டன, இன்னும் சில இனிமேல் பொய்ப்பிக்கப்பட இருக்கின்றன.

முஹம்மத் நபியின் மீது இட்டுக் கட்டப்பட்ட பொய்களின் தொகுப்பான ஹதீஸ்களிலும் உலக முடிவு குறித்துப் பல பொய்கள் இட்டுக்கட்டப்பட்டுள்ளன ● சூரியன் கிழக்கில் உதிப்பது ● ஒற்றைக் கண் கொண்ட 'அசுரன்' தஜ்ஜால் வருவது, ● ஒரு தீப்பிழம்பு மக்களை விரட்டி வந்து ஓரிடத்தில் ஒன்று சேர்ப்பது, ● விண்ணிலிருந்து யேசு இறங்கி மக்களுக்குத் தலைவராவது, அவரே அசுரன் தஜ்ஜாலை கொல்வது என்பன போன்ற பல, கடவுளின் செயல்பாட்டு முறையான இயற்கைக்கு மாற்றமாக உள்ளது.

அது மட்டுமின்றி, ● செருப்புப் போடாதவர் களெல்லாம் உயரமான கட்டடங் களுக்குச் சொந்தக்காரர்கள் ஆவார்கள், ● செல்வம் தரையில் கிடக்கும் யாரும் அதை எடுக்க மாட்டார்கள், ● பெண்கள் இசையின் மேல் அதிக நாட்டம் கொள்வார்கள் என்பன போன்ற 'எட்டணா ஜோசியங்களும்' அவற்றில் நிறைந்துள்ளன.

பொய்களின் அடிப்படையில் உலக முடிவு நாளை எதிர்பார்த்துக் கொண்டிருப்பதால் உண்மையில் குர்ஆனில் கூறப்பட்டுள்ள உலக முடிவு நாளின் அடையாளங்களான மெய்ப்பிக்கும் தூதரின் வருகை, மனிதர்கள் தங்கள் இரட்சகரின் வேதத்தில் உறுதி கொண்டவர் களாக இல்லை என்பதை அறிவிக்கும் விலங்கான கம்யூட்டரின் செய்தி.* வரவிருக்கும் புகை வேதனை ஆகியவற்றைப் பற்றி அவர்கள் அறிந்து கொள்ள முடியாமல் டி இருக்கிறார்கள் என்று புதிய நினைவூட்டல் இதழில் நாம் முன்னரே கண்டுள்ளோம். (விஞ்ஞான இதழான கலைக் கதிர் (Internet ஐ 'கோடி கைகள் கொண்ட விலங்கு' என்றே வர்ணித்துள்ளது).

மறுபுறம் விஞ்ஞானிகளோ 'சூரியன் குளிர்ந்து போனால் தான் உலகம் அழியும். அதற்கு இன்னும் கோடிக்கணக்கான வருடங்கள் ஆகும்' என்று ஆருடம் கூறிக் கொண்டிருக்கின்றார்கள். வேறு சில ஆருடங்களும் விஞ்ஞானிகளால் முன்வைக்கப் படுகின்றன.

ஆயினும் நாம் இதுவரை கண்ட அனைத்து வகை ஆருடங்களுக்கும் அவர்கள் தரும் ஆதாரங்கள் மிகவும்

பலமற்றவையாகவே உள்ளன. இந்த ஆதாரங்கள் . உறுதியற்றவை, தங்களுடைய ஆரூடங்கள் பொய்த்துப் போக கூடியவை என்பதை அவற்றைக் கூறியவர்களே " நன்கறிந்திருக்கக் கூடும்.

ஆனால் இப்பொழுது குர்ஆன் மனித சக்திக்கு அப்பாற்பட்ட ஓர் அற்புதக் கணிதக் கட்டமைப்பில் இருப்பதால் அது கூறும் உலக முடிவு நாள் குறித்த தகவல்கள் சத்தியமானவை என்பதை நாம் அறிந்து கொண்டிருக்கிறோம்.

விஞ்ஞானிகள் உலக முடிவு நாளுக்கு இன்னும் ஏராளமான காலம். இருப்பதாகக் கூறினாலும் எந்த நொடியிலும் இவ்வுலகம் அழிந்து விடக் கூடிய சாத்தியம் உள்ளதை அவர்கள் மறுக்க வில்லை . இறைவனின் ஆணைப்படி எந்த நொடியிலும் பூமி பிளந்து உலகம் அழிந்து விடக்கூடும்.

விண்ணிலிருந்து ஏதேனும் ஒன்று மிகப் பெரிதாக வந்து பூமியில் மோதினால் உலகம் அழிந்து விடக்கூடும். இதை விஞ்ஞானிகள் யாரும் மறுக்கவில்லை . இறைவன் இதையே குர்ஆனிலும் கூறுகிறார். (12 : 107, 16 : 45 போன்ற வசனங்கள்)

எந்த நொடியிலும் உலகம் அழிந்து விடக்கூடிய சாத்தியக் கூறு இருப்பினும், கடவுள் உலக முடிவு நிராகரிப்போருக்கு மட்டுமே திடீரென ஏற்படும் என்றும், நம்பிக்கை கொண்டவர்கள் அதை எதிர்பார்த்தவர்களாகவும் அதன் அடையாளங்களை நன்கறிந்த வர்களாகவும் இருப்பார்கள், என்றும் அந்நாளில் அவர்களுக்கு எந்த அச்சமும் இருக்காது என்றும் விதித்துள்ளார். முடிவு நாள் நிராகரிப்போருக்கு மட்டுமே திடீரென நிகழும். பார்க்க குர் வசனங்கள் 6:31, 44, 47, 21:40; 22:55; 29:53; 39:55, 43:66; மற்றும் 47:18. நம்பிக்கையாளர்கள் உலக முடிவு நாளை எதிர் பார்த்திருப்பர்கள், அவர்கள் திடுக்கமுறவும் மாட்டார்கள். பார்க்க குர்ஆ ன் 2:212; 3:106; 5:119; 6:15, 16; 7:44; 16:97; 21:103; 33:44; மற்றும் 47:18.

எனவே, கடவுளின் வாக்குறுதி களுக்கேற்ப, குர்ஆனில் மறைக்கப் பட்டிருந்த இரகசியச் செய்தியான (Coded Message) 19ன் கட்டமைப்பை வெளிப்படுத்திய மெய்ப்பிக்கும் தூதர் இரஷாத் கலீஃபா தன்னுடைய தூதுச் செய்திகளில் ஒன்றாக நம்பிக்கையாளர்கட்கு உலக முடிவு நாளை அறிவிக்கிறார். பார்க்க 3:81, 72:27.

கடவுள், நம்பிக்கையாளர்கட்கு நம்பிக்கையை அதிகப்படுத்தும் விதமாகவும், நம்பிக்கையாளர் கட்கும், வேதம் கொடுக்கப்பட்டவர் களுக்கும் எல்லா ஐயங்களையும் நீக்கி உறுதியைக் கொடுக்கு முகமாகவும் அமைத்த இக்கட்டமைப்பு நயவஞ்சகர்களைக் குழப்பத்தில் ஆழ்த்தி அவர்களை வெளிப்படுத்தவும் செய்கிறது. (74:30-31)

மனித சக்திக்கு அப்பாற்பட்டதாக அமைக்கப்பட்டிருப்பதால் அவ்வற் புதம், அல்குர்ஆன் இறைவனி டமிருந்து வந்துள்ள இறுதிவேதமே என்பதை நிரூபிப்பதாகவும், அதுவே அல்குர்ஆன் முழுமையாகப் பாதுகாக்கப்பட்டதாக உள்ளது என்பதை மனிதர்களுக்கு அறிவிப்பதாகவும் அமைந்துள்ளது. இவ்வாறு பன்முகப் பரிமாணம் காட்டும் அவ்வற்புதம் மறுமை நாளையும் குறிப்பிட்டுக் காட்டுவதாக இறைவனால் அமைக்கப்பட்டுள்ளது.

இப்போது, நாம் உலக முடிவு நாள் ம் குறித்து மெய்ப்பிக்கும் தூதரின் குர்ஆன் ஆங்கில மொழி பெயர்ப்பின் அனுபந்தம் 25ல் அவர் கூறுவதைக் காண்போம்.

## அது மறைக்கப்பட்டதாக இராது (20:15).

அத்தியாயம் 20ன் வசனம் 15 உலக முடிவு நாளுக்கு முன்னர் அது அறிவிக்கப்பட்டுவிடும் என்று தெரிவிக்கிறது. (இவ்வசனத்தையும் ஹதீஸ்களின் அடிப்படையில் செய்யப்பட்ட குர்ஆன் மொழி பெயர்ப்புக்கள் சிதைந்து வைத்துள்ளன. இங்கே (A r a b i c Words) 'அகாது உக்பீஹா' என்ற பதம் கூறப்படுகிறது. இதற்கு 'நான் அதை மறைத்து வைக்க நாடுகிறேன்' என்றே அனைவரும் மொழி பெயர்த்துள்ளனர். உண்மையில் 'அகாது' என்ற பதத்திற்கு ஏறத்தாழ, கிட்டத்தட்ட என்பதே அர்த்தம் ஆகும். இந்த 'அகாது' என்ற பதம் குர்ஆனில் வெவ்வேறு இடங்களில் எவ்வாறு பயன்படுத்தப்படுகிறது என் குர்ஆனின் மாணவர்கள் கவனிக்க வேண்டும். பார்க்க : 2:20, 42:5,

**நாம் உமக்கு ஏழு ஜோடிகளையும்,
மகத்தான குர்ஆனையும் தந்துள்ளோம். (15:87)**

இவ்வாறிருக்கையில் ஏன் அவ்வாறு மொழிபெயர்த்தார்கள் என்றும் அதில் 'விரும்புகிறேன்' என்ற வார்த்தைக்கு என்ன பதம் பிரயோகப் படுத்தப்படுகிறது. என்றும் அவர்களிடம் நம்பிக்கையாளர்கள் கேட்க வேண்டும். மறைத்து வைக்க விரும்புகிறேன் என்று இறைவன் கூறினால் பின் ஏன் அதன் அடையாளங்களைக் கூறவேண்டும் என்றும் சிந்திக்க வேண்டும். இவர்கள் மொழிபெயர்த்த விதத்தில்தான் குர்ஆன் போல் முரண்பாடுகள் தெரிகின்றது.

உண்மையில் குர்ஆனில் எந்த முரண்பாடும் இல்லை என்பதை நம்பிக்கையாளர்கள் நன்கறிந்துள்ளனர். ஆகவே 'அகாது உக்பீஹா' என்ற வாசகத்திற்கு "நான் கிட்டத்தட்ட அதை மறைத்து வைப்பேன்" என்பதே சரியான மொழி பெயர்ப்பாகும். எனவே நம்பிக்கை கொள்ளாததால் குர்ஆனில் வெளிப்படுத்தப்படும் மறுமை நாள்

## குர்ஆனின் முத்திரை எழுத்துக்கள் எண்மதிப்பு

| | | | |
|---|---|---|---|
| 1. காஃப் | - Q | - | 100 |
| 2. நூன் | - N | - | 50 |
| 3. ஸாத் | - S | - | 90 |
| 4. ஹா மீம் | - H.M | - | 48 |
| 5. தா ஹா | - T.H | - | 14 |
| 6. யா ஸீன் | - Y.S | - | 70 |
| 7. தா ஸீன் | - T.S | - | 69 |
| 8. அலிஃப்லாம் மீம் | - A.L.M | - | 71 |
| 9. அலிஃப்லாம் ரா | - A.L.R | - | 231 |
| 10. தா ஸீன் மீம் | - T.S.M | - | 109 |
| 11. ஐன் ஸீன் காஃப் | - A.S.Q | - | 230 |
| 12. அலிஃப் லாம் மீம் ஸாத் | - A.L.M.S | - | 161 |
| 13. அலிஃப் லாம் மீம் ரா | - A.L.M.R | - | 271 |
| 14. காஃப் ஹா யா ஐன் ஸாத் | - K.H.Y.A.S | - | 195 |
| | | | 1709 |

அவர்களுக்கு மறைக்கப் பட்டதாகவே இருக்கும், நம்பிக்கையாளர்கள் அதை எதிர்நோக்கிக் காத்திருப்பார்கள் என்றும் நாம் அறிந்து கொள்கிறோம்.

மேலும் அத்தியாயம் 15ன் வசனம் 87 எப்பொழுது உலக முடிவு வரும் என்பதை அறிவிக்கிறது.

மறுமை குறித்து அறிவிக்கும் இவ்வசனத்தையும் ஹதீஸ்களின் அடிப்படையில் செய்யப்பட்ட மொழிபெயர்ப்புக்கள் எவ்வாறு சிதைத்து வைத்துள்ளன என்பதை ஏப்ரல் மாத புதிய நினைவூட்டல் இதழில் அல்முபீன் பதில்கள் பகுதியில் நாம் ஏற்கனவே எழுதி உள்ளோம். இவ்விதழில் அது மறுபிரசுரம் செய்யப்பட்டுள்ளது

அந்த ஏழு ஜோடிகள் என்பன குர்ஆனின் 14 முத்திரை எழுத்துக்களே. குர்ஆனுடைய அற்புதத்தின் ஆழமான தெளிவான தூண்களான இம்முத்திரை எழுத்துக்களின் மொத்த எண் மதிப்பு, உலக முடிவு நாள் ஏற்படும் வருடத்தைக் குறிப்பிட்டுக் காட்டுகிறது.

அத்தியாயம் 15ன் வசனம் 85கூறுவது இங்கே கவனிக்கத்தக்கது: “இவ்வுலக முடிவு நிச்சயம் நிகழ்ந்தே தீரும்” அதற்கடுத்த வசனம் 86 இறைவன்தான் இவ்வுலகைப் படைத்தவர் என்று கூறுகிறது. மேலும், நிச்சயமாக எப்பொழுது உலக முடிவு ஏற்படும் என்பதை அவர் அறிவார். அதற்கடுத்து வரும் வசனம் 15:87 உலக முடிவு எப்போது ஏற்படும் என்பதை நமக்குக் கூறுகிறது.

அட்டவணையில் காணப்பட்டுள்ள படி, குர்ஆனின் முத்திரை எழுத்துக்களான இந்த ஏழு ஜோடிகளின் மொத்த எண்மதிப்பு 1709.

15:87ன் படி, இம்முன்னறிவிப்பு குர்ஆனில் கூறப்பட்ட நேரத்தில் இருந்து 1709 சந்திர வருடங்கள் மட்டுமே இவ்வுலகம் இருக்கும். இதன் அர்த்தம் என்னவென்றால் இவ்வுலகம் 1710 ஹிஜ்ரியில் முடிவுக்கு வரும். இவ்வெண் ஒரு 19ன் பெருக்குத் தொகையாகும் 1710=19 X 90.

இத்தகவல் இவ்வுலகிற்கு வெளிப்படுத்தப்பட்டது ஹிஜ்ரி 1400 வது வருடம் ஆகும், அதாவது முன்னறிவிக்கப்பட்ட உலக முடிவு நாளுக்கு 309 வருடங்களுக்கு முன்னர் (1709-1400=309) இந்த எண் 309, குர்ஆனில் கூறப்பட்டுள்ள ஒரு எண்ணாகும் (18:25),

மேலும் அது உலக முடிவு நாளுடன் தொடர்பு கொண்டதாக உள்ள து. (18:21). 18:25ல் 309 ஐக்

குறிப்பிடும் போது கடவுள் ஒரு வித்தியாசமான, சிறப்பான முறையில் மூன்று நூறு வருடங்களும், அதிகமாக ஒன்பதும் என்று எழுதுகிறார். இது 309 வருடங்கள் என்பது சந்திர வருடங்களே என்பதைக் குறிக்கிறது. முன்னூறு சூரிய வருடங்களுக்கும் முன்னூறு சந்திர வருடங்களுக்கும் உள்ள வித்தியாசம் 9 வருடங்கள் ஆகும்.

இக்கண்டுபிடிப்பு நிகழ்ந்த ஹிஜ்ரி, 1400, ஆங்கில வருடம் 1980 ஆகும். 1980 உடன் 300 சூரிய வருடங்களைக் கூட்டினால் வரும் கூட்டுத்தொகை 2280ம் 19ன் பெருக்குத் தொகையே. 2280=19 X 120. இவ்விதமாக இவ்வுலகம் 1710 ஹிஜ்ரியில் முடிவடையும். 19 X90, அது ஆங்கில வருடம் 2280 ஆக இருக்கும் 19 X 120.

சக்திவாய்ந்த இந்தக் குர்ஆன் ஆதாரங்களை ஏற்றுக் கொள்ளாத நம்பிக்கையற்றோருக்கு இவ்வுலக முடிவு திடீரென நிகழ்ந்தோறும் (6:31, 44, 47; 7:95, 187; 12:107; 21:40; 22:55; 26:202; 29:53; 39:55; 43:66 மற்றும் 47:18)

ஹதீஸ்களை மார்க்க ஆதாரமாக எடுத்துச் செயல்படுவதை விட்டு நாம் தடுக்கப்பட்டிருக்கும் அதே சமயம், நமக்கு அது ஒரு உபயோகமான சரித்திர ஆதாரமாக இருக்க முடியும். இஸ்லாத்தின் ஆரம்ப காலச் சரித்திர சம்பவங்கள், அரபு நாட்டுக் கலாச்சாரம், பாரம்பர்ய நடைமுறை ஆகியவை குறித்த ஏராளமான தகவல்களை நாம் ஹதீஸ்களின் மூலமாகப் பெற்றுக் கொள்ள முடியும். குர்ஆனின் முத்திரை எழுத்துக்கள் முஸ்லிம் சமுதாயத்தின் மொத்த ஆயுட்காலத்தை நிர்ணயிப்பதாக நம்பப்பட்டு வந்தது என்பதை ஹதீஸ் தொகுப்புக்கள் குறியிட்டுக் காண்பிக்கின்றன. 'அல்பைளாவியின்' விரிவுரையில் காணப்படும் கீழ்க்கண்ட ஒரு சரித்திரச் சம்பவம் குர்ஆனின் முத்திரை எழுத்துக்களுக்கு ஒரு சாத்தியமான விளக்கத்தை எடுத்துக் காட்டுகிறது. இதே சம்பவம் அஸ்ஸுயூத்தியின் இத்கான் (முதல் பதிப்பு ஆங்கிலம், 1318 A.H. பாகம் 2 பக்கம் 10) என்ற நூலிலும் விவரிக்கப்பட்டுள்ளது.

மதினாவைச் சேர்ந்த யூதர்கள் நபியிடம் சென்று கூறினர், “உம்முடைய குர்ஆன் அலிஃப், லாம், மீம் என்று முத்திரையிடப்பட்டுள்ளது. இம்முத்திரை எழுத்துக்கள் உமது மார்க்கத்தின் ஆயுட்காலத்தை நிர்ணயிக்கிறது. அலிஃப் என்பது ஒன்று, லாம் என்பது 30, மீம் என்பது

40. எனவே இதன் அர்த்தம் உமது மார்க்கத்தின் ஆயுட்காலம் 71 வருடங்கள். முஹம்மத் கூறினார், "எங்களிடம் அலிஃப், லாம், மீம், ஸாத் என்பதும் உள்ளது. அவர்கள் கூறினர், "அலிஃப் 1, லாம் 30, மீம் 40, ஸாத் 90. இது மொத்தம் 161. உம்மிடம் வேறு ஏதேனும் உள்ளதா? நபி கூறினார், ஆம், அலிஃப், லாம், மீம், ரா. அவர்கள் கூறினர், "இது பெரியதாகவும், கனமானதாகவும் உள்ளது ; அலிஃப் 1, லாம் 30, மீம் 40, ரா 200, இது மொத்தம் 271". பின்னர் அவர்கள் "இவருக்கு எத்தனை முத்திரை எழுத்துக்கள் கொடுக்கப்பட்டுள்ளன என்பதை நாம் அறிந்திருக்கவில்லை " என்ற கூறிச் சென்ற விட்டனர்.

**தகவல்: புகழ்பெற்ற ஸுயூத்தியின் புத்தகம் 'இத்கான்'.**

இவ்விஷயம் நன்கறியப்பட்ட ஒன்றாக இருந்தாலும், ஏராளமான முஸ்லிம் அறிஞர்கள் குர்ஆனின் முத்திரை எழுத்துக்களுக்கும் உலக முடிவுக்கும் உள்ள தவறில்லாத இத் தொடர்பை ஏற்றுக் கொள்ளத் தயக்கம் காட்டுகின்றனர். உலக முடிவு நாளையும் இறைவனின் தீர்ப்பையும் நிதர்சனமான உண்மையாக்குகிறது என்ற ஒரு எளிய காரணத்தினால்தான் அவர்கள் இவ்விஷயத்தை ஏற்றுக் கொள்ள மறுக்கின்றனர்.

"இரட்டையான ஏழு -
ஸப் அம் மினல்
மஸானி"

(April மாத புதிய நினைவூட்டல் இதழில் வெளிவந்த முபீன் கேள்விகளுக்கு பதில்கள் பகுதியிலிருந்து மறுபிரசுரம் செய்யப்படுகிறது.)

**"நிச்சயமாக நாம் உமக்கு இரட்டையானவற்றி லிருந்து ஏழினையும், மகத்தான குர்ஆனையும் வழங்கியிருக் கின்றோம்".**

இரட்டையானவற்றில் ஏழு அல்லது திரும்பப் திரும்ப ஓதப்படும் ஏழு என்றால் என்ன அர்த்தம்? இரட்டையான ஏழு என்பதைத் தனியாகவும், குர்ஆனைத் தனியாகவும் அல்லாஹ் கூறுகிறார். எனவே குர்ஆனுக்கு நிகராகக் கூறப்படும் அந்த ஏழு எது?

பதில் : மறைக்கப்பட்ட சத்தியத்தை வெளிக்கொணர்ந்த அல்லாஹ் வுக்கே எல்லாப் புகழும்! "இரட்டையான வற்றில் ஏழு" என்ற இந்த மொழிபெயர்ப்பை நீங்கள் இதுவரை கூறவில்லையே. ஏன்? இரட்டையான வற்றில் ஏழு அல்லது திரும்பத் திரும்ப

ஓதப்படும் ஏழு என்று அர்த்தத்தை எங்கிருந்து பெற்றீர்கள். ஆம்! இந்தத் தவறான மொழிபெயர்ப்பு ஹதீஸ்களின் அடிப்படையில் செய்யப்பட்டதே!

ஆயினும் அதன் சரியான மொழிபெயர்ப்பு இரட்டையான ஏழு அல்லது ‘7 ஜோடி' என்பதே. ஹதீஸ்களின் அடிப்படையில் இஸ்லாமிய அறிஞர்கள் 'அல்ஃபாதிஹா' அத்தியாயம்தான் 'ஸப்அம்மினல் மதானி' 'இரட்டையான ஏழு' (இதைப் பொருந்தாத விதமாக திரும்பத் திரும்ப ஓதப்படும் ஏழு என்று சிதைத்துள்ளார்கள்) என்று கூறுகின்றனர். மேலும் இங்கே குர்ஆனைத் தனியாகவும் ஸப்அம் மினல் மதானி என்பதைத் தனியாகவும் அறிந்திருக்கின்றனர். அல்ஃபாத்திஹா அத்தியாயம் குர்ஆனின் ஒரு பகுதிதானே! அதைப் பிரித்துக் கூறுவதன் தாத்பர்யம் என்ன, ஏன்? எவ்வாறு அல்பாத்திஹா குர்ஆனிலிருந்து தனித்து நிற்கிறது என்ற கேள்விகட்கெல்லாம் ஹதீஸ்களில் பதில் இல்லை . இப்போது நாம் ஸப்அம்மினல் மதானி (o n ஏழு ஜோடி' என்றால் என்ன என்று இறைவனால் அறிவிக்கப் பட்டிருக்கிறோம். 'ஒவ்வொரு செய்திக்கும் (முன்னறிவிப்புக்கும்) ஒரு காலகட்டமுண்டு' என்ற 6:67 வசனப்படி இப்போது நாம் புதிய நினைவூட்டல்கள் அளிக்கப் பட்டுள்ளோம்.

15:87ல் குர்ஆனிலிருந்து தனித்துக் கூறப்படும் 'ஸப்அம் மினல் மஸானி' - 'ஏழு ஜோடி' என்பது, குர்ஆனில் அமைக்கப்பட்டுள்ள அற்புதக் கணிதக் கட்டமைப்பின் முக்கிய அங்கமான 'ஹீருஃபுல் முகத்த ஆத்' - 'முத்திரை எழுத்துக்கள்' என்பதையே குறிக்கிறது. ஆம்! அவற்றில் 14 எழுத்துக்கள் (7 ஜோடி) பயன்படுத்தப் பட்டுள்ளன. அவை 1. அலிஃப், 2. (ல) லாம், 3 (ம) மீம் , 4. (ஸ) ஸாத், 5. (ர) ரே, 6. (க) (Q) காஃப், 7. (ஹ) ஹா, 8. (ய) யா, 9. (அ) அய்ன் , 10. (தா) த்தா, 11. (ச) சீன், 12. (ஹ) ஹா, 13. (K) (க) காஃப், 14. (ன) நூன் ஆகிய எழுத்துக்கள். இவை மொத்த அரபி எழுத்துக்களின் பாதி ஆகும்!

அது மட்டுமல்ல, அவை 14 வகைகளாகவும் அமைக்கப் பட்டுள்ளன. அவை 1. அலிஃப் லாம் மீம், 2. அலீஃபலாம் ரா, 3. அலிஃப் லாம் மீம்ரா, 4. அலிஃப் லாம் மீம் ஸாத், 5. நூன், 6. ஸாத், 7. யாஸீன், 8. ஹா;ம, 9. - அய்ன் ஸீன் காப், 10. ஸாத், 11. காப்

ஹா யா அய்ன் ஸாத், 12. தா ஹா, 13. தாஸீன், 14. தாஸின்மீம் ஆகும்.

நம்பிக்கை கொண்டவர்களுடன் இறைவன் தான் தேர்ந்தெடுத்த தூதர்கள் மூலம் தொடர்பு கொள்கிறார். அவ்விதமாக மெய்ப்பிக்கும் தூதர் ரஷாத் கலீஃபா அவர்கள் மூலம் 'ஸப்அம் மினல் மதானி 'ஏழு ஜோடி' என்பதன் உண்மையான அர்த்தம் - விளக்கம் என்ன என்பதை நாம் இப்போது அறிந்திருக்கின்றோம். இன்னும் இது போல் ஹதீஸ்களின் அடிப்படையில், இன்றைய இஸ்லாமிய அறிஞர்கள் சிதைத்தும், திரித்தும், மாற்றியும் கூறி வரும் வசனங்கள் அனைத்திற்கும் மிகச்சரியான, தெளிவான விளக்கங்களை ரஷாத் கலீஃபாவின் ஆங்கில மொழிபெயர்ப்பில் நாம் அறிந்துகொள்கிறோம்.(மேலும்இந்த ஸப்அம்மினல் மதானி (15:87) இறுதி நாளுடன் தொடர்புபடுத்திக் கூறப்படுவதன் தாத்பயர்த்தையும் இன்ஷா அல்லா நாம் பின்னர் அறிந்து கொள்ளலாம்.

ஸப்அம் மினல் மதானி - 'ஏழு ஜோடி' என்பது 19ன் அடிப்படையில் அமைக் கப்பட்டுள்ள, அற்புதக் கட்டமைப்பின் முக்கிய அங்கமான முத்திரை எழுத்துக்களே! இம் முத்திரை எழுத்துக்களின் தாத்பர்யத்தை இப்போது நாம் அறிந்துள்ளாம். (பார்க்க இறைவனின் முத்திரை 19) அவ்வற்புதம் குர்ஆனின் பொருள் உள்ளடக்கத்தோடு தொடர்பு இல்லாதது. எனவே இறைவன் மகத்தான குர்ஆனையும், ஸப்அம் மினல் மதானி ஏழு ஜோடியையும் தனித்துக் கூறுவதன் தாத்பர்யத்தையும் நாம் எண்ணி எண்ணி வியக்கிறோம்!

15:87ல் குர்ஆனிலிருந்து தனித்துக் கூறப்படும் 'ஸப்அம் மினல் மஸானி' - 'ஏழு ஜோடி' என்பது, குர்ஆனில் அமைக்கப்பட்டுள்ள அற்புதக் கணிதக் கட்டமைப்பின் முக்கிய அங்கமான 'ஹீருஃபுல் முகத்த ஆத்' - 'முத்திரை எழுத்துக்கள்' என்பதையே குறிக்கிறது. ஆம்! அவற்றில் 14 எழுத்துக்கள் (7 ஜோடி) பயன்படுத்தப் பட்டுள்ளன.

# இரும்பு - எஃகு
# IRON - STEEL
# அல்குர்ஆனின் அதி அற்புதம்
## (இண்டர்நெட் வெப்சைட் submission.orgமூலமாக)

சர்வ ஞானமும், சர்வ வல்லமையும் படைத்த இறைவன் குர்ஆனில் கூறியிருக்கிறார் - பின்வருமாறு -

"எல்லாவற்றையும் எண்ணிக்கையால் கட்டுப்படுத்தி வைத்திருக்கிறோம்!" (72:28), 72:28 (7+2+2+8 = 19) குர்ஆ னின் 'கணிதக் கட்டுமானம்' ஒரு மிகப்பெரிய அற்புதமாகும். 'மாபெரும் அற்புதங்களில் ஒன்று (74:35)' என இறைவன் இதனை வர்ணிக்கிறார்! 74:35 (7+4+3+5 = 19) இறைவன் வாக்களித்துள்ளதைப் போலவே அல்குர்ஆனின் 'கணிதக் கட்டுமானப் புதிர்கள் ' மெல்ல மெல்ல வெளிப்படத் துவங்கியுள்ளன, ஏராளமான புதிர்கள் விடுவிக்கப்பட்டு வருகின்றன.

பின்வரும் தொகுப்புக்கள் (இரும்பு எஃகு பற்றியன) 'சப்மிட்டார்' (இறைவனிடம் பணிந்தோர்) மாத பத்திரிக்கை இதழ் ஒன்றிலிருந்து எடுத்து பிரசுரிக்கப்பட்டுள்ளன. குர்ஆன் முழுமையானது. மிகச்சரியானது, விவரிக்கப்பட்டது என்று தனது வேதத்தில் இறைவன் நமக்கு உறுதியளிக்கிறார். உண்மையாகவே இறைவனுக்கு பணிந்தவர்கள் (முஸ்லிம்கள்) இதனை ஏற்றுக் கொள்வார்கள். மற்றவர்களோ இதர ஆதார நிலைகளைத் தேடுவார்கள். அவர்கள் இறைவனின் மீது நம்பிக்கை கொள்ளாது இவ்வாறு செய்கின்றனர்.

மாணவர்கள் பள்ளிக்கூடம் செல்கிறார்கள். அங்கு பலவிதமான பாடங்களை பயில்கிறார்கள். அவர்களுக்கு சொல்லித் தரப்படும் பாடம் சரியானது தானா? ஆசிரியர் சரியாக கற்பிக்கிறாரா? பாடம் எழுதிய ஆசிரியர் பாடத்தை சரியாக விளக்கியிருக்கிறாரா? என்றெல்லாம் கேட்பது இல்லை. கணித பாடத்தில்

“அல்ஜீப்ராவின் மாறிலி" கோட்பாட்டையோ “கூட்டுக் கொள்கை" யின் அமலாக் கத்தையோ ஒருவர் புரிந்து கொள்ள வில்லை என்றால் தனக்கு அந்த பாடம் விளங்கவில்லை என்றுதான் ஆதங்கப்படுவார் - மற்றபடி புத்தகத்திலுள்ள பாடம் எப்போதுமே சரியானது தான்! இதுதான் நிலைமை.

இந்த நிலைமை குர்ஆனின் விசயத்தில் மட்டும் தலைகீழாய் கடைப்பிடிக்கப்படுவது ஏன்?

"குர்ஆனில் முழுமையான விளக்கம் இல்லை?" என்று எப்போதும் ஒரு குற்றச்சாட்டு சொல்லப்படுகிறது. இதற்கு மாற்றமாக "குர்ஆன் முழுமையாக விவரிக்கப்பட்டது என்று இறைவன் உறுதியளிக்கிறார்.

"அறிவையும் - ஞானத்தையும் அளிப்பது நானே " என்று இறைவன் கூறுகிறார். சாலோமன் ஹார்வர்டு சட்டக் கல்லூரியில் படிக்கவில்லை, துல்கர்னைன் எந்த ஒரு M I T தொழில் நுட்பக் கல்லூரியிலும் படித்தவரல்ல. "அறிவு - மிகச் சரியாக புரிந்து கொள்ளும் ஆற்றல்" இறைவனிடமிருந்து இவர்களுக்கு அளிக்கப்பட்டது. இது இறைவனுக்கு கீழ்ப்படிந்து (பணிந்து) பாராட்டத்தக்க விதத்தில் வாழ்கின்ற அடியார்களுக்கு கிடைக்கிறது. இதனை இவர்கள் அறிந்தவர்களாய் இருந்தார்கள். இவர்களும் குர்ஆனில் சொல்லப்பட்ட இதர தூதர்களும் தாங்கள் பெற்ற அருட் கொடைகளுக்காக இறைவனுக்கு நன்றியறிதலுடன் வணக்கம் செலுத்துபவர்களாகவே இருந்தார்.

ஒரு சிலர் இவ்வருட்கொடைகளை 'இயற்கை தந்த வரம்' என்கிறார்கள்.

துல்கர்னைன் வரலாறு மிகவும் சுவையானது ஆகும். ஏனெனில் மிக எளிய வார்த்தைகளில் இறைவன் உறுதியான இரும்பு - எஃகு உற்பத்தி செய்வதை விளக்குகிறார். அத்தியாயம் 18 (குர்ஆ ன் - சுரா 18)ல் துல்கர்னைன் வரலாற்றை இறைவன் விவரிக்கிறார். துல்கர்னைன் தனது பயணத்தின் போது வித்தியாசமானதொரு கூட்டத்தைக் கண்டார். இரண்டு மலையிடை பள்ளத்தாக்கு ஒன்றில் வாழ்ந்து வந்தனர். அவர்கள் 'காக்' & 'மகாக்' (யஃஜுஜ், மஃஜுஜ்) என்கிற மோசடிக் கூட்டங்களைப் பற்றி கூறினார்கள். மோசமான இக்கூட்டங்களிலிருந்து தங்களைப் பாதுகாத்துக் கொள்ள ஒரு தடைச் சுவரை எழுப்பிட வேண்டும் என்று கேட்டுக் கொண்டார்கள்.

அத்தியாயம் 18-95வது ஆயத்தில் துல்கர்னைன் இறைவன் தனக்கு நிறைய - அருட்கொடைகளை வழங்கியுள்ளதாக கூறுகிறார். 18-96ல் இரும்பையும், எஃகு எனும் ‘கலப்பு உலோகம்' தயாரிப்பதையும் இறைவன் விவரித்திருக்கிறார். மக்களுக்காக 1400 ஆண்டுகளாக இவ்விபரம் வெளிப்படுத்தப் பட்டுள்ளது. இன்றைய விஞ்ஞானத்தில் உலோகங்களைப் பற்றிய இயலில் எஃகு உற்பத்தி செய்முறைகளை அறிந்திருக்கின் றோம்.
57 அத்தியாயம். 57 = 19 X 3

## THE IRON
## AL HADEED

'இரும்பு' என்ற வார்த்தை அரபியில் 'அல்-ஹதீத் என்று குறிப்பிடப்பட்டுள்ளது இவ்வரபி வார்த்தைக்கான ‘எண் மதிப்பு' 'ஜெமாட்டிரிகல் வால்யூ' 57ஆக வருகிறது! அத்தியாயத்தின் - சூராவின் எண்ணும் 57தான்! 'ஹதீத்' என்ற அரபி வார்த்தைக்கு ('அல்' - சேராமல்) எண் மதிப்பு - ஜெமாட்ரிகல் வால்யூ 26 ஆக வருகிறது.

பிரபஞ்சத்திலுள்ள அனைத்தும் 109 வகை தனிமங்களால் - அணுக்களால், ஆக்கப்பட்டிருக் கின்றன. இந்த அணுக்களின் கருவில் புரோட்டான்களும் 8 + 3 கருவைச் சுற்றி சுற்றுப்பாதை வளையங்களில் எலக்ட்ரான்களும் (-) இருக்கின்றன. புரோட்டான் + எலக்ட்ரான் = ஜோடி

அணுக்களின் புரோட்டான் (அ) எலக்ட்ரான் எண்ணிக்கை அணு எண் Atomic Number ஆகும். அணு எண் வரிசைப்படி தனிமங்கள் - அணுக்கள் வரிசைப்படுத்தப் பட்டுள்ளன.

இவ்வட்டவணையில் இரும்பு - Fe 26வது இடத்தை பெறுகிறது!

இரும்பு அணுவின் கருவில் 26 புரோட்டான்கள் உள்ளன. எனவே அது தனிமங்களின் பட்டியலில் அணு எண் வரிசைப்படி 26வது இடத்தை பெற்றுள்ளது.

57வது அத்தியாயம் 25வது ஆயத்தில் இறைவன் இரும்பைப் பற்றி கூறுகிறார். இறைவனைக் குறிக்கின்ற 'அல்லாஹ்' என்ற அரபி வார்த்தை இவ்வத்தியாயத்தில் - சூராவின் துவக்கத்திலிருந்து பல ஆயத்தங்களில் வருகிறது. 25வது ஆயத்தில் 'அல்லாஹ்' என்ற வார்த்தை வருவது எண்ணிக்கையில் 26 முறை வருவது இரும்பு அணுவின் புரோட்டான்களின் எண்ணிக்கையும் 26தான்!

57வது அத்தியாயத்தில் 'அல்லாஹ்' என்ற வார்த்தையை கொண்டிருக்கிற ஆயத்துக்களை மட்டும் வரிசைப்படுத்தினால் அவ்வார்த்தையை கொண்டிருக்கிற 19வது ஆயத்தாக 25வது ஆயத்து வருகிறது! இறைவன் சர்வ வல்லமை வாய்ந்தவர்!

(கடிதம் - 'இ' மெயில்)
Brother Yasser Haridi - Nasa

சகோதரர் யாசர் ஹரிதி - நாஸா - விண்வெளி ஆராய்ச்சி மற்றும் ஏவுகணை தளம் (புளோரிடா மாநிலம் - அமெரிக்கா)

அருமையான சகோதரர்களே. சகோதரிகளே, எனது 'கம்ப்யூட்டர்' - இண்டர்நெட்டில் 'வெப் - சைட்' தளங்களை பார்த்துக் கொண்டிருக்கும் போது 'submission - org' என்ற தளத்திலிருந்து கிடைத்த ஒரு கட்டுரையை படித்தேன். "அல் குர்ஆனும் இரும்பின் அற்புதங்களும்" என்பது அந்த கட்டுரையாகும். எங்களுடைய 'நாஸா' விண்வெளி ஆராய்ச்சி மற்றும் ஏவுகணை பிரிவின் விஞ்ஞானி ஒருவரும் இது குறித்து கட்டுரை எழுதியுள்ளனர். அதனையும் படித்தேன். இந்த இடத்தில் எனது கருத்துக்களையும் தெரியப்படுத்திட விரும்புகிறேன்.

நாஸா விண்வெளி ஆராய்ச்சி மற்றும் ஏவுகணை தளத்தில் பணியாற்றும் பேராசிரியர் ஆர்ம்ஸ் ரோஸ் ஒரு விஞ்ஞானி ஆவார். அவரிடம் இரும்பு பற்றி கேட்கப்பட்டது. இரும்பு எப்படி தோன்றுகிறது என்றும் கேட்கப்பட்டது. விஞ்ஞானி பேராசிரியர் ஆம்ஸ்ரோஸ் பதில் கூறுகையில் பூமியிலுள்ள தனிமங்கள் (அணுக்கள்) எல்லாம் எப்படி உருவாகின என்று விவரித்தார். சமீபகாலமாகவே விஞ்ஞானிகள் தனிமங்களை (அணுக்களை) உருவாக்கும் வழிமுறைகளை கண்டறிந்துள்ளார்கள். இவற்றுள் 'இரும்பு' மாத்திரம் விதிவிலக்காக உள்ளது!

(அணு எண் 26 கருவில் 26 புரோட்டான்களும் வெளிச்சுற்றில் 27 எலக்ட்ரான்களும் உள்ளன) (1s2s 2p 3s2 3p° 4s2 3d6) மற்ற தனிமங்களைப் போல் அல்லாது இரும்பு அணு உருவாக்குவதற்கு அதிக சக்தி - ஆற்றல் தேவைப்படுகிறது. ஒரு இரும்பு அணுவை உருவாக்குவதற்கு பூமியிலுள்ள மொத்த சக்தியும் - ஆற்றலும் கூட போதுமானதல்ல! பூமியும், செவ்வாயும், சந்திரனும், சூரியனும்சேர்ந்தால்கூடஒருஇரும்பு

அணுவை உருவாக்கத் தேவையான சக்தியும் - ஆற்றலும் அளித்திட முடியாது ! மொத்த சூரிய குடும்பமும் SOLAR SYSTEM சேர்ந்தால் கூட ஒரு இரும்பு அணுவை உருவாக்கிட முடியாது! எனவேதான் விஞ்ஞானிகள் இரும்பு பூமியில் உருவான ஒரு தனிமம் அல்ல என்று கருதுகிறார்கள். பூமிக்கு அப்பால் வெகு தொலைவிலிருந்து EXTRA - TER RESTRIAL இரும்புத் தனிமம் பூமியில் இறங்கியிருக்க வேண்டும் என்றும் கருதுகிறார்கள், இவ்வாறு விஞ்ஞானி பேராசிரியர் ஆம்ஸ்ரோஸ் கூறியுள்ளார்.

பின்வரும் குர்ஆன் 57:25 ஆயத்தை பரிசீலிப்போம்!

“தெளிவான அத்தாட்சிகளுடன் நம்முடைய தூதர்களை அனுப்பியுள்ளோம். வேதத்தை சட்டவிதிகளையும் அவர்கள் மூலமாக இறக்கியருளினோம். அதனை பின்பற்றி நேர்மையாளர்களாய் வாழ் வதற்காக இவற்றை இறக்கினோம். மேலும் இரும்பை இறக்கியருளினோம். அதில் உறுதிப்பாடு (சக்தியும் ஆற்றலும்) மற்றும் பல்வேறு பயன்கள் மக்கள் பயன்படுத்துவதற்காக உள்ளன. இறைவனையும் இறைவனுடைய தூதர்களையும் பணிந்து கீழ்படிந்து உண்மையாளர்களை மற்றவர்களிடமிருந்து பிரித்து வேறுபடுத்திக் காட்டுவதற்காக இறைவன் ஏற்படுத்தியுள்ள பல்வேறு ஏற்பாடுகளில் இதுவும் ஒன்றாகும். இறைவன் சக்தி மிக்கவரும் சர்வ வல்லமையாளருமாக இருக்கிறார்.” 57:25

"..இரும்பை இறக்கி......" என்ற வார்த்தையை கவனிக்கவும். குர்ஆனில் இறக்கி வைக்கப்பட்ட உலோகமாக இரும்பு மட்டுமே குறிப்பிடப்பட்டுள்ளது. 'இரும்பு' என்ற தலைப்பில் ஒரு அத்தியாயமே இருக்கிறது. சூரா 57 அல்-ஹதீத்

சுபஹானல்லாஹ்!

பின்வரும் ஆயத்துக்களையும் படித்து பயன் பெறுக ----

17:41 இந்த குர்ஆ னில் எல்லாவற்றையும் நாம் எடுத்துக் கூறியுள்ளோம் (எல்லா விசயங்களுக்குமான உதாரணங் கள்) சிந்தித்து உணர்வதற்காக இவை கூறப்பட்டுள்ளன. ஆனால் அவை நம்பிக்கையற்றோர்க்க வெறுப்பையே அதிகரிக்கும்.

20:113 “இவ்வாறு நாம், ஒரு அரபியிலான குர்ஆனில் வெளிபடுத்தியுள்ளோம்! எல்லாவித தீர்க்க தரிசனங்களும் - எதிர்காலம் குறித்த செய்திகளும் அதில் சொல்லப்பட்டு விட்டன. சிந்தித்து உணர்ந்து கொண்டவர்கள் ஈடேற்றும் பெறுவர். ஏனையோர் அடைவது வழிகேடே!

24:18 "இறைவன் தனது வெளிப்பாடுகளை இவ்விதமாக விளக்குகிறார். இறைவன் சர்வஞானம் கொண்டவர்" "அறிவில் மிகைத்தவர்".

29:51 "நீங்கள் அறிந்து கொள்வதற்காக உங்களுக்கு இறக்கித்தரப்பட்ட இந்த புத்தகம் ச (வேதம் - குர்ஆன்) ஒரு அதி அற்புதமாக இருப்பதை நீங்கள் காணவில்லையா? இது நம்பிக்கை யாளர்களுக்கு நமது நினைவூட்டலாகும்! நாம் வெளிப் படுத்தும் கருணையாகும்."

30:58 "இவ்வாறு இந்த குர்ஆனில் மக்களுக்கு தேவையான அனைத்து விசயங்களையும் நாம் தெளிவுபடுத் தியுள்ளோம். நம்பிக்கை யற்றவர்களிடம் எப்படிப்பட்ட அத்தாட்சிகளை நீங்கள் காண்பித்தாலும் சரிதான் அவர்களிடம் மாறுதல் ஏற்படப்போவதில்லை, மேலும் அவர்கள் உங்களைப் பொய்யர்கள் என்றுரைப்பார்கள்.

34:5 " நமது - வெளிப்பாடுகளை எதிர்த்து சவால் விடுத்துக் கொண்டிருப்பவர்களைப் பொறுத் தவரையில் - மிகவும் வேதனை தரும் துயர்மிகு தண்டனையை சம்பாதித்துக் கொண்டவர்களாக இருக்கிறார்கள்.

34:6 " இறைவன் நமக்களித்துள்ள வெளிப்பாடு (குர்ஆன்) உண்மையாக இருக்கிறது என்ற அறிவுறுத்தலை இறைவனின் கிருபையைப் பெற்றவர்கள் பெறுகிறார்கள். அதன்மூலம் தெளிவு பெறுகிறார்கள். அவர்கள் பெற்ற அறிவு அவர்களை புகழுக்குரியவரும் சர்வ வல்லமை பெற்றவருமான இறைவனின் பாதையில் அழைத்துச் செல்கிறது."

47:24 "அவர்கள் ஏன் குர்ஆனை கவனமாக படிக்கக் கூடாது? அவர்கள் தங்கள் சிந்தனைக்கு (இதயத்திற்கு பூட்டுப் போட்டு விட்டார்களா?"

75:16-19

16. "அதனைத் - துரிதப் படுத்துவதற்காக உமது நாவை அசைக்காதீர்கள்'

17. "குர்ஆனை ஒன்று சேர்ப்பதுதான் நம்முடைய பொறுப்பாக இருக்கிறது."

18. "அப்படிப்பட்ட குர்ஆனை நாம் உங்களுக்கு தந்திருப்பது பின்பற்றுவதற்கேயாகும்.

19. "மேலும் குர்ஆனை உங்களுக்கு விளக்குவதும் எமது பொறுப்பாக இருக்கிறது"

இறைவன் ஒருவனே!

ஹரிதி.

# இறைவனுக்கு அறிமுகம் தேவையா?

K.H. ஜீனத்

குர்ஆன் மட்டுமே இறைவனுடைய உண்மையான பின்பற்றத்தகுந்த மார்க்க வழிகாட்டி என நாம் ஆதாரங்களுடன் கூற முற்பட்டால் இறைவனுடைய, குர்ஆனுடைய, முஹம்மத் நபியுடைய எதிரிகள் என்ன கூறுகின்றனர்? இறைவனை அறிமுகப் படுத்தியவரே முஹம்மத் நபிதான் என்று (இன்னும் சிலர் முஹம்மத் நபி இல்லையெனில் குர்ஆனே இல்லை என்றும் கூறுகின்றனர்) கூறி மாபெரும் இறை நிந்தனைக்கு ஆளாகின்றனர்.

இவர்களது கூற்று,இறைவனுடைய கண்ணியத்தை, சர்வ வல்லமையை, குணாதிசயத்தைக் களங்கப் படுத்தும் மாபெரும் இறைநிந்தனையாகும்.இவர்களுடைய இந்தக் கூற்றுக்குக் குர்ஆன் ஒளியில் விளக்கம் தேட முற்படுவோம். இறைவன் நமக்கு நேர்வழிகாட்டப் போதுமானவர்.

## முதலாவது :

இறைவன் எல்லாவற்றையும் நன்கறிந்தவர்

ஆதியும் அவரே; அந்தமும் அவரே! தோன்றுவதும் அவரே; மறைந்திருப்பதும் அவரே; அவர் சகலவற்றையும் நன்கறிந்தவர்(57:3)

இறைவன் சகலவற்றையும் நன்கறிந்தவர். உண்மையான இறை நம்பிக்கையாளர்கள் என்றும் நிலைத்திருக்கும் சர்வ வல்லமை உள்ள இறைவனது உள்ளமையை நம்புவார்கள். என்றும் நிலைத்திருக்கும் இறைவனை அவர் படைத்த சாதாரண ஒரு சிருஷ்டியான, மிகக் குறுகிய கால வாழ்நாளைக் கொண்ட ஒரு மனிதர் தன்னுடைய வாழ்நாளில் உள்ளோருக்கும், பின்வரும் சந்ததியினருக்கும் (மறுமை வரையுள்ள) அறிமுகப் படுத்துபவராயிருக்கிறார் என்ற விஷயம் மிக மிக விந்தையானது அல்லவா?

இறைவன் சகலவற்றையும் நன்கறிந்தவர் என்பதனை நமக்கு அறிவுறுத்தும் வசனங்கள் : 2:29, 74, 85, 140, 144, 149, 231, 255, 283,3:29, 99; 4:32, 108, 176,6:101, 132, 8:47,75; 9:44, 115; 11:92, 123;12:19; 13:42; 14:37, 42; 15:24; 16:101; 18:91, 21:81; 23:17; 24:28, 35, 41,64; 26:188; 27:93;

29:45, 62; 33:40, 54; 41:54; 42:12, 19, 25; 47:30; 48:26; 50:4; 57:3; 58:7; 64:11; 65:12; 72:28.

## இரண்டாவது :

இறைவன் தனது உள்ளமையைத் தானே ஒவ்வொருவருக்கும் உணர்த்துகிறார்:

இறைவன் தனது உள்ளமையைத் தனது இதர படைப்புகளைக் கொண்டு மனிதனுக்கு உணர்த்துகிறார். இதனை உண்மைப்படுத்தும் வசனங்கள் குர்ஆன் முழுவதும் பரவியிருக்கின்றன. அவற்றுள் சில:

(35:3, 35:9, 35;11-13, 35;41, 35, 35:27-28, 56:57-87, 57-17)

காற்றும், மழையும், கடலும், வானும் இன்னும் அநேக படைப்புகளும் இறைவனது உள்ளமையைப் பறைசாற்றிக் கொண்டிருக்கின்றன.

கடல் அலைகள் யாருக்குக் கட்டுப்பட்டு தன் எல்லையோடு நிற்கிறது? அது தன் எல்லையைக் கடந்தால் யாரால் கட்டுப்படுத்த முடியும்? ஆர்ப்பரித்துக் கொண்டு வரும் அருவிகள் யாருக்குக் கட்டுப்பட்டு தன் எல்லைக்குள் ஓடுகிறது? அவை தன் எல்லையைக் கடந்தால் யாரால் கட்டுப்படுத்த முடியும்? மழை யாருக்குக் கட்டுப்பட்டுஅளவோடுபெய்கிறது? அது பொய்த்து விட்டாலோ, அளவு மீறினாலோ யாரால் கட்டுப்படுத்த முடியும்?

இன்னும் பற்பல செயல்பாடுகளில் இறைவன் தனது உள்ளமையை உணர்த்துகிறார். இறைவனை ஒவ்வொரு மனிதனும் அறிவு பூர்வமாக அறிந்து கொள்ளப் போதுமான விவரங்கள் நம்மைச் சுற்றிலும் அன்றாடம் நிகழ்ந்து கொண்டுதான் இருக்கின்றன. கண்ணிருந்தும் குருடராக இருப்பவர்களைப் பார்க்கச் செய்ய சாதாரண மனிதர்களால் இயலாது. இறைவனை அறிய வேதங்களோ, இறை தூதர்களோ தேவையில்லை. அவரது படைப்புகளைக் கொண்டோ, அவற்றின் செயல்பாடுகளை கொண்டோ ஒவ்வொருவரும் அறிந்து கொள்ள முடியும்.

ஆனால் இறைவன் மனிதர்கள் மீது கருணை புரிவதைத் தன்மீது கடமையாக்கிக் கொண்டதாலும் (6:12) நேர்வழி காட்டும் வேதங்களைத் தருவதாக வாக்குறுதி அளித்ததாலும் (2:38) நபிமார்களை அனுப்பி வேதங்களை அருள்கின்றார்.

என்றும் நிலைத்திருக்கும் சர்வ வல்லமையுள்ள இறைவன் எல்லா காலத்திலும் - மனிதர்கள் ஒவ்வொருவருக்கும் தனது

உள்ளமையை உணர்த்துவது அவருக்கு இயலாத காரியமன்று. முஹம்மத் நபிதான் இறைவனை அறிமுகப் படுத்தினார் என்றால் அவருக்கு முன்னர் வாழ்ந்த மக்கள் இறைவனை அறியாமல் இருந்தனரா? முஹம்மத் நபிக்கு பின்னர் இந்த சுமார் 1400 ஆண்டு காலமாக (இவர்கள் கூற்றுப்படி முஸ்லிம் அல்லாத மக்கள்) வாழ்ந்த மக்கள் அனைவருமே இறைவனை முற்றிலும் அறியாதவர்களா? இன்றைய காலகட்டத்தில் வாழ்ந்திருக்கும் பல்வேறு மதங்களையும் சார்ந்த, மதங்கள் சாராத மக்களிடம் இறைவனை அவர்கள் அறிந்திருக்கின்றனரா இல்லையா? என்பது பற்றி இந்த அறிவிலிகள் பரீட்சித்துப் பார்க்கலாமே?

## மூன்றாவது:

நபிமார்களையும், வேதங்களையும், உண்மையான இறை நம்பிக்கையாளர்கள் கொண்டு தங்கள் இறை நம்பிக்கையை பலப்படுத்திக் கொள்வார்கள் இறைவன் தனது உள்ளமையைத் தானே உணர்த்துகிறார் எனில் நபிமார்களும் வேதங்களும் எதற்காக? என்ற கேள்வி பிறக்கிறது இல்லையா? இதற்கான விளக்கத்தைக் குர்ஆன் ஒளியில் அறிய முற்படுவோம். மக்களிடம் அனுப்பப்பட்ட இறை தூதர்களும் நபிமார்களும் தங்களை அறிமுகப் படுத்திக் கொள்கிறார்களேயன்றி இறைவனுடைய கண்ணியத்தை ஒரு போதும் களங்கப்படுத்தியதில்லை. விவரங்களுக்கு 26:107, 26:123-126, 26:142-145, 26:160-163, 26:178 இவ்வசனங்களைக் கவனிக்கவும், இறைவனைத் தேடும் நோக்கமுடைய இறை நம்பிக்கையாளர்களுக்கு அவர்கள் தன்னிடத்தில் மீண்டு கொள்ளவும் ஷைத்தானின் வழிகேட்டிலிருந்து தங்களைக் காத்துக் கொள்ளவும் இறைவன் நபிமார்களை அனுப்பி வேதங்களைக் கொண்டு நேர்வழியை அருள்கின்றார்.

இது இறைவனின் மாபெரும் கருணையின் வெளிப்பாடே ஆகும். ஆழ்மனதில் இறைவனைத் தேடும் நம்பிக்கையாளர்கள் நபிமார்களை தூதர்களை அடையாளம் கண்டு கொண்டு அவர்களைப் பின்பற்றுவார்கள். (3:52, 26,;46-48) அவர்கள் பெற்றுத் தந்த வேதத்தை நம்புவார்கள். (2:4, 6:57) இறைவனைத் தேடி அறிந்து கொள்பவர்கள் ஷைத்தானுடைய பாதையில் சென்று விடாமல் நேர் வழியைப் பெற்று கொள்ளவே வேதங்கள் துணை புரிகின்ற ன. (41;44)

இவர்களுக்கு இறைவனை அறிமுகப் படுத்தி வைக்க ஒரு நபர்

தேவையாக இல்லை. நபிமார்கள், தூதர்கள். காலத்தில் வாழ்பவர்களானாலும் அவர்களுக்குப் பின் வருகின்ற மக்களானாலும் உண்மையான இறை தேடல் உள்ளவர்களுக்கு இறைவன் தனது வேதத்தினைத் தாமே அறியத் தருகிறார். குர்ஆனைக் கற்று இறைவழியில் ஈடுபட்ட பல மனிதர்களை, மாற்று மதத்தவரை, அரபியல்லாதவரை நாம் இன்று நேரடியாக அறிந்து கொள்ள வாய்ப்பிருக்கிறது. இவர்களுக்கு இறைவனை அறிமுகப் படுத்தியவர் யார்?

## நான்காவது :

மறுமை பற்றியும், இறைவனின் எச்சரிக்கை பற்றியும் அவ நம்பிக்கை கொள்பவர்களுக்கே இறைவனை அறிமுகப்படுத்த ஒருவர் தேவை:

மறுமையையும் இறைவனின் எச்சரிக்கையையும் அவநம்பிக்கை கொள்பவர்கள் நபிமார்களிடம், தூதர்களிடம் உங்கள் இறைவன் யார்? என்ற கேள்வியைக் கேட்பார்கள். பின்னர் அதற்கான ஆதாரங்களையும் கேட்பார்கள். ஆனால் அவர்கள் தங்களுடைய கர்வத்தினால் கிடைக்கின்ற பதிலை அலட்சியம் செய்வதோடு நபிமார்களுக்கும் தூதர்களுக்கும் துன்பமிழைக்கவும் நாடுவார்கள். ஈஸா நபி இறைவனைக் குறித்து எச்சரிக்கை செய்யும்போது பலரும் நிராகரிக்கின்றனர். இதனை குர்ஆன் வசனம் (3:51, 52) எடுத்துக் காட்டுகிறது. பிர் அவ்ன் உலகத்தாரின் இறைவன் யார்? எனக்கேட்டு மூஸா நபியின் பதிலை அலட்சியப் படுத்துகிறான். இதனை 26:23-29 வரையுள்ள வசனங்கள் தெளிவுப்படுத்துகின்றன. இவை ஒரு சில எடுத்துக் காட்டுகளேயாகும். இந் நிராகரிப்பாளர்களுக்கு இறைவனை அறிமுகப் படுத்தத் தேவையிருந்திருக்கிறது என்றாலும் அவர்கள் நம்பிக்கை கொள்ளவில்லை.

## ஐந்தாவது :

முஹம்மத் நபியின் வாழ்நாளில் இறைவனை மக்கள் அறிந்திருந்தனர்.

முஹம்மத் நபியின் வாழ்நாளில் மக்கள் இறைவன்தான் தங்களைப் படைத்துப் பாதுகாக்கிறார் என்பதை அறிந்திருந்தனர். ஆனால் அவர்கள் இணை வைப்பதை விட்டு விலகாததுடன் நபியின் தூதுச் செய்தியையும் நிராகரிக்கின்றனர். இவர்களைப் பற்றிக் குர்ஆன் கூறுவதைக் காண்போம்.

**"அவர்களில் பெரும்பாலோர் நம்பிக்கை கொண்டாலும், இணைவைப்பில் வீழாமலில்லை" (12:106)**

கூறும்: பூமியும் அதிலுள்ள ஒவ்வொன்றும் யாருக்குரியன? நீங்கள் அறிந்திருந்தால் கூறுங்கள். "அவர்கள், "அல்லாஹ்வுக் குரியனவே" என்று கூறுவார்கள். "அப்படியானால் ஏன் நீங்கள் கவனம் செலுத்த மறுக்கிறீர்கள்?" (23:84, 85)

இவ்வசனங்களைத் தொடர்ந்து 23:89 வரையுள்ள வசனங்களையும் கருத்தூன்றிப் படிக்கவும். 23:90ல் இறைவன் கூறுவதைக் கவனியுங்கள்: "நாம் அவர்களுக்குச் சத்தியத்தையே கொடுத்திருந்தோம். ஆயினும் அவர்கள் நிச்சயமாகப் பொய்யர்களே!"

இறைவன்தான் சகலவவற்றின் அதிபதி என்று கூறுபவர்களை இறைவன் 'பொய்யர்கள்' என்று கூறுவதன் காரணத்தை ஆழ்ந்து சிந்திக்கும் மக்கள் மட்டுமே அறிந்து கொள்ள முடியும்.

## மாபெரும் இறைநிந்தனை:

இறுதியாக, முஹம்மத் நபிதான் இறைவனை அறிமுகப் படுத்தினார் எனவே அவரைத் துதித்துக் கொண்டிருப்போம் என்று கூறபவர்கள் எவ்வாறு மாபெரும் இறை நிந்தனைக்கு ஆளாகின்றனர்? என்பது குறித்த ஒரு படிப்பினை தரக்கூடிய வசனத்தைக் காண்போம்.

யூதர்கள், 'உஜைர் அல்லாஹ்வுடைய மகன்' என்று கூறுகின்றனர். கிறிஸ்தவர்கள் 'ஈஸா அல்லாஹ்வுடைய மகன்' என்று கூறுகின்றனர். இவையாவும் அவர்களுடைய வாய்களிலிருந்து வெளியாகின்ற இறை நிந்தனை களாகும். இவர்களுடைய இந்த இறைநிந்தனைகள் இவர்களுக்கு முன்னிருந்த நிராகரிப்பாளர்களை ஒத்திருக்கிறது. இறைவன் இவர்களை அழித்து விடுவார். அவர்கள் நிச்சயமாக விலகி சென்று விட்டனர். (9:30)

இவ்வசனத்தில் தவ்ராத் அருளப்பட்ட மக்களின் கூற்றையும், இன்ஜீல் அருளப்பட்ட மக்களின் கூற்றையும் பற்றி குர்ஆனில் கூறப்பட்டிருக்கிறது. குர்ஆனுக்குப் பின்னர் யாதொரு வேதமும் இல்லை. எனவே நாம் தேவையான படிப்பினைகளைக் குர்ஆனிலி ருந்தே ஆழ்ந்து சிந்தித்து ஏவல், விலக்கல்களை அறிந்து கொள்ள வேண்டும். குர்ஆன் அருளப்பட்ட பின்னர் முஸ்லிம்கள் என்று கூறிக் கொள்பவர்களின் கூற்றைப் பாருங்கள்: 'முஹம்மத் நபிதான் அல்லாஹ்வை அறிமுகப் படுத்தினார்' இவர்களுடைய கூற்றும் முன்னிருந்த தவ்ராத், இன்ஜீலை உடைய மக்களுடைய கூற்றும் மிகச் சரியாக ஒத்திருக்கிறது அல்லவா?

★ ★ ★

## Sura 2: The Heifet (Al-Baqarah)

## அத்தியாயம் - 2 : பசுங்கன்று (அல்பகறா)

وَقَالَتِ الْيَهُوْدُ لَيْسَتِ النَّصٰرٰى عَلٰى شَىْءٍ وَّقَالَتِ النَّصٰرٰى لَيْسَتِ الْيَهُوْدُ عَلٰى شَىْءٍ وَّهُمْ يَتْلُوْنَ الْكِتٰبَ كَذٰلِكَ قَالَ الَّذِيْنَ لَا يَعْلَمُوْنَ مِثْلَ قَوْلِهِمْ فَاللّٰهُ يَحْكُمُ بَيْنَهُمْ يَوْمَ الْقِيٰمَةِ فِيْمَا كَانُوْا فِيْهِ يَخْتَلِفُوْنَ

113. The Jews said, "The Christians have no basis," while the Christians said, "The Jews have no basis." Yet, both of them read the scripture. Such are the utterances of those who possess no knowledge. God will judge them on the Day of Resurrection, regarding their disputes.

113. யூதர்கள் கூறினர், கிறிஸ்துவர்களுக்கு எந்த அடிப்படையுமில்லை, அதே சமயம் கிறிஸ்துவர்கள் கூறினர், யூதர்களுக்கு எந்த அடிப்படையுமில்லை, ஆயினும், அவர்கள் இருசாராருமே வேதத்தைப் படிக்கின்றனர். இவ்விதமானவை எந்த அறிவையும் கொண்டிராதவர்களின் கூற்றுக்களேயாகும். அவர்களுடைய சர்ச்சைகள் குறித்து, உயிர்த் தெழுப்பப்படுகின்ற நாளில் கடவுள் அவர்களுக்குத் தீர்ப்பளிப்பார்.

*You Shall Frequent the Masjid*

**நீங்கள் அடிக்கடி மஸ்ஜிதுக்கு செல்லுங்கள்**

وَمَنْ اَظْلَمُ مِمَّنْ مَّنَعَ مَسٰجِدَ اللّٰهِ اَنْ يُّذْكَرَ فِيْهَا اسْمُهٗ وَسَعٰى فِىْ خَرَابِهَا اُولٰٓئِكَ مَا كَانَ لَهُمْ اَنْ يَّدْخُلُوْهَآ اِلَّا خَآئِفِيْنَ لَهُمْ فِى الدُّنْيَا خِزْىٌ وَّلَهُمْ فِى الْاٰخِرَةِ عَذَابٌ عَظِيْمٌ

114. Who are more evil than those who boycott God's masjids, where His name is commemorated, and contribute to their desertion? These ought not to enter therein except fearfully. They will suffer in this life humiliation, and will suffer in the Hereafter a terrible retribution.

114. அவருடைய பெயர் நினைவு கூரப்படுகின்ற கடவுள்-ன் பள்ளிவாசல்களைப் புறக்கணித்து, அவற்றைப் பாழ்படுத்தப் பங்களிப்பவர்களை விட, மிகவும் அக்கிரமக்காரர்களாக இருப்பவர்கள் யார்? இவர்கள் அச்சம் நிறைந்தவர்களாகவே தவிர அதனுள் நுழைவதற்கில்லை. அவர்கள் இந்த வாழ்வில் இழிவை அனுபவிப்பார்கள், மேலும் மறுவுலகிலோ பயங்கரமானதொரு தண்டனையால் துன்புறுவார்கள்.

وَلِلّٰهِ الْمَشْرِقُ وَالْمَغْرِبُ فَاَيْنَمَا تُوَلُّوْا فَثَمَّ وَجْهُ اللّٰهِ اِنَّ اللّٰهَ وَاسِعٌ عَلِيْمٌ.

115. To God belongs the east and the west; wherever you go there will be the presence of God. God is Omnipresent, Omniscient.

115. கிழக்கும் மேற்கும் கடவுள்-க்கே உரியவை; எங்கெல்லாம் நீங்கள் செல்கின்றீர்களோ அங்கே கடவுள்-ன் இருப்பு உள்ளது. கடவுள் எங்குமிருப்பவர், எல்லாம் அறிந்தவர்.

*Gross Blasphemy*

**முழுமையான இறை நிந்தனை**

بَدِيْعُ السَّمٰوٰتِ وَالْاَرْضِ وَ اِذَا قَضٰٓى اَمْرًا فَاِنَّمَا يَقُوْلُ لَهٗ كُنْ فَيَكُوْنُ

116. They said, "God has begotten a son!" Be He glorified; never! To Him belongs everything in the heavens and the earth; all are subservient to Him.

116. அவர்கள் கூறினர், கடவுள் ஒரு மகனைப் பெற்றெடுத்துள்ளார்! அவர் துதிப்பிற்குரியவராக இருக்கின்றார்; ஒருபோதுமில்லை! வானங்கள் மற்றும் பூமியில் உள்ள ஒவ்வொன்றும் அவருக்கே உரியவை; அனைத்தும் அவருக்குக் கீழ்ப்படிந்தவையாகவே உள்ளன.

اِنَّآ اَرْسَلْنٰكَ بِالْحَقِّ بَشِيْرًا وَّنَذِيْرًا ۙ وَّلَا تُسْـَٔلُ عَنْ اَصْحٰبِ الْجَحِيْمِ

117. The Initiator of the heavens and the earth: to have anything done, He simply says to it, "Be," and it is.

117. வானங்கள் மற்றும் பூமியின் துவக்ககர்த்தா: எந்த ஒன்றும் செய்யப்பட வேண்டுமென்றால், அவர் அதன் பால் ஆகு என்று மட்டுமே கூறுகின்றார், உடனே அது ஆகி விடுகின்றது

وَقَالَ الَّذِيْنَ لَا يَعْلَمُوْنَ لَوْلَا يُكَلِّمُنَا اللّٰهُ اَوْ تَاْتِيْنَآ اٰيَةٌ كَذٰلِكَ قَالَ الَّذِيْنَ مِنْ قَبْلِهِمْ مِّثْلَ قَوْلِهِمْ تَشَابَهَتْ قُلُوْبُهُمْ قَدْ بَيَّنَّا الْاٰيٰتِ لِقَوْمٍ يُّوْقِنُوْنَ

118. Those who possess no knowledge say, "If only God could speak to us, or some miracle could come to us!" Others before them have uttered similar utterances; their minds are similar. We do manifest the miracles for those who have attained certainty.

118. எந்த அறிவையும் கொண்டிராதவர்கள் கூறுகின்றனர், கடவுள் நம்முடன் பேச மட்டும் இயன்றால், அல்லது ஏதேனும் ஓர் அற்புதம் நம்மிடம் வந்தால்! இவர்களுக்கு முன்னர் மற்றவர்களும் ஒப்பான கூற்றுகளையே கூறியிருந்தனர்; அவர்களுடைய மனங்கள் ஒத்தவையாகவே இருக்கின்றன. உறுதிப்பாட்டை அடைந்து விட்டவர்களுக்கு அற்புதங்களை நாம் தெளிவாகக் காட்டவே செய்கின்றோம்.

إِنَّا أَرْسَلْنٰكَ بِالْحَقِّ بَشِيْرًا وَّنَذِيْرًا ۙ وَّلَا تُسْـَٔلُ عَنْ أَصْحٰبِ الْجَحِيْمِ

119. We have sent you with the truth as a bearer of good news, as well as a warner. You are not answerable for those who incur Hell.

119. நற்செய்தியைச் சுமக்கின்ற ஒருவராகவும், அவ்வண்ணமே ஓர் எச்சரிப்பவராகவும் சத்தியத்துடன் உம்மை* நாம் அனுப்பியுள்ளோம். நரகத்திற்கு உள்ளாவோருக்காக நீர் பதிலளிக்க வேண்டியவராக இல்லை.

وَلَنْ تَرْضٰى عَنْكَ الْيَهُوْدُ وَلَا النَّصٰرٰى حَتّٰى تَتَّبِعَ مِلَّتَهُمْ ۗ قُلْ إِنَّ هُدَى اللّٰهِ هُوَ الْهُدٰى ۗ وَلَئِنِ اتَّبَعْتَ أَهْوَآءَهُمْ بَعْدَ الَّذِىْ جَآءَكَ مِنَ الْعِلْمِ ۙ مَا لَكَ مِنَ اللّٰهِ مِنْ وَّلِيٍّ وَّلَا نَصِيْرٍ

120. Neither the Jews, nor the Christians, will accept you, unless you follow their religion. Say, "God's guidance is the true guidance." If you acquiesce to their wishes, despite the knowledge you have received, you will find no ally or supporter to help you against God.

120. யூதர்களோ, அன்றிக் கிறிஸ்துவர்களோ, அவர்களுடைய மார்க்கத்தை நீர் பின்பற்றினாலேயன்றி, உம்மை அங்கீகரிக்க மாட்டார்கள். கூறுவீராக, கடவுள்-ன் வழிகாட்டல்தான் மெய்யான வழி காட்டலாகும். நீர் பெற்றிருக்கின்ற அறிவிற்குப் பின்னரும், அவர்களுடைய விருப்பங்களுக்கு நீர் இணங்கினால், கடவுள்க்கெதிராக உமக்கு உதவ எந்தக் கூட்டாளியையோ அல்லது ஆதரவாளரையோ நீர் காணமாட்டீர்.

| | | |
|---|---|---|
| اَلَّذِيْنَ اٰتَيْنٰهُمُ الْكِتٰبَ يَتْلُوْنَهٗ حَقَّ تِلَاوَتِهٖ اُولٰٓٮِٕكَ يُؤْمِنُوْنَ بِهٖ ‌ وَمَنْ يَّكْفُرْ بِهٖ فَاُولٰٓٮِٕكَ هُمُ الْخٰسِرُوْنَ | 121. Those who received the scripture, and know it as it should be known, will believe in this. As for those who disbelieve, they are the losers. | 121. வேதத்தைப் பெற்று மேலும் அதனை அறிய வேண்டியவாறு அதனை அறிந்திருப்பவர்கள், இதனில் நம்பிக்கை கொள்வார்கள். நம்பமறுப்போரைப் பொறுத்தவரை, அவர்கள்தான் நஷ்டவாளிகளாக இருக்கின்றனர். |
| يٰبَنِىْٓ اِسْرَآءِيْلَ اذْكُرُوْا نِعْمَتِىَ الَّتِىْٓ اَنْعَمْتُ عَلَيْكُمْ وَاَنِّىْ فَضَّلْتُكُمْ عَلَى الْعٰلَمِيْنَ | 122. O Children of Israel, remember My favor which I bestowed upon you, and that I blessed you more than any other people. | 122. இஸ்ரவேலின் சந்ததியினரே, உங்கள் மீது நான் அருட் செய்த என் உபகாரத்தையும், மேலும் மற்றெந்த மக்களையும் விட அதிகமாக நான் உங்களை ஆசீர்வதித்தேன் என்பதையும் நினைவில் கொள்ளுங்கள். |

## ***Foot Note***

2:119 It is my obligation to point out that the identity of this messenger is confirmed to be "Rashad Khalifa," God's Messenger of the Covenant. By adding the gematrical value of "Rashad"(505),plus the gematrical value of "Khalifa"(725),plus the verse numder (119),we get 1349,a multiple of 19.See 3:81

## 2:119 பின்குறிப்பு

இங்கே கூறப்படும் தூதர். மெய்ப்பிக்கும் தூதர் ரஷாத் கலீஃபாதான் என்பது உறுதிப்படுத்தப்பட்டுள்ளதை குறிப்பிட வேண்டியது என்னுடைய பணியாகும். ரஷாத் என்ற வார்த்தையின் எண் மதிப்பான (505)ஐயும் கலீஃபா என்ற வார்த்தையின் (725)ஐயும் இவ்வசனம் இடம்பெறும் எண்ணான 119ஐயும் கூட்டினால் வரும் 1349. ஒரு 19ன் பெருக்குத் தொகை ஆகும்.

# இறைவனுக்கு அறைகூவல் விடுக்கும் முஹம்மதியர்கள்

அவர்கள் கேட்கிறார்கள் : "குர்ஆன் முழுமையானது, தெளிவானது, விவரிக்கப்பட்டது (6:19, 38, 114-115; 7:52, 41:3, & 50 : 45 ஆகிய வசனங்களில் குர்ஆன் அவ்வாறு கூறுகிறது :) என்றால், அன்றாடத் தொழுகையின் பகுதிகள் (ரக அத்துக்கள்) எத்தனை என்று குர்ஆனில் எங்கே உள்ளது? உதாரணமாக (ளுஹ்ர்) பகல் தொழுகை நான்கு பகுதிகள் கொண்டது என்பது எங்கே உள்ளது?"

"முஹம்மத் நபியின் மேல் இட்டுக்கட்டப்பட்ட இந்தப் பொய்ச் செய்தியை நம்பி முஹம்மத் நபியின் நாவிலிருந்து வந்த இறைவனின் வார்த்தைகளான அல்குர்ஆனை நிராகரிக்கிறார்கள்."

இதில் ஒரு வினோதமான விஷயம் என்னவென்றால், இந்த அறைகூவலான கேள்வியைக் கேட்பவர்கள் குர்ஆன் முழுமையானது, விவரிக்கப் பட்டது, என்பதை ஒப்புக்கொள் பவர்களாகவும் அவர்கள் இருக்கிறார்கள். ஆனால், அவர்கள் 'ஆனால்' என்ற வார்த்தையை அத்துடன் சேர்த்து மேற்குறிப்பிட்ட பிரசித்தி பெற்ற கேள்வியைக் கேட்கின்றனர்.

பகல் தொழுகை நான்கு பகுதிகள் என்று குர்ஆனில் எனக்குக் காட்டுங்கள் என்று அவர்கள் கேட்கும்போது அவர்களை வாயடைக்க வைத்து. அவர்களை வீழ்த்தும் பதில் என்னவென்றால்: "பகல் தொழுகை நான்கு பகுதிகள் கொண்டது என்பதை ஹதீஸ்களில் எனக்குக் காட்டுங்கள்" குர்ஆன்

மட்டும் மார்க்க ஆதாரமாக இருக்கப் போதுமானது என்ற உண்மைக்கு எதிரான அவர்களுடைய இந்த எதிர்ப்புணர்வு அவர்களைக் குருடாக ஆக்கி விட்டது. உண்மையில் ஹதீஸ்களில் தொழுகை பற்றிய எந்த விபரங்களும் சரியாகவும், தெளிவாகவும் இல்லை, அவை முரண்பட்ட தகவல்களாகவே உள்ளன என்பதை அவர்களை மறக்கும் படி செய்து விடுகின்றது. (இதற்கு இன்று பற்பல பிரிவுகளாகி, வெவ்வேறு விதமாக தொழுது கொண்டிருக்கும் முஸ்லிம் சமுதாயமே சாட்சி)

இறைவனுக்கு அறைகூவல் விடுத்து குர்ஆனின் முழுமையை மறுக்கும் அவர்களுடைய இந்த வீண் முயற்சியில், அவர்கள் கூறுகின்றனர், "என்னை எவ்வாறு தொழக் கண்டீர்களோ அவ்வாறு தொழுங்கள் என்றொரு ஹதீஸ் உள்ளது" நபி தொழுததை அவர்கள் காணவில்லை என்பதை ஒப்புக் கொண்டாலும், ஹதீஸ்களில் நபியின் ஐவேளைத் தொழுகைகளும் முழுமையாக பதியப்பட்டுள்ளதாக அவர்கள் கூறத்தலைப்படுவர்.

குர்ஆன் முழுமையானது, விவரிக்கப்பட்டது, தெளிவானது என்று மீண்டும் மீண்டும் வலியுறுத்திக் கூறும் இறைவனின் வார்த்தைகளை அவர்கள் நம்பாததன் காரணமாகவும், குர்ஆனைப் புரிந்து கொள்வதை விட்டு இறைவன் அவர்களைத் தடுத்து விட்டதன் காரணமாகவும், அவர்களால் கீழ்கண்டவாறு குர்ஆன் கூறுவதைப் புரிந்து உணர்ந்து கொள்ள முடியவில்லை: "இப்றாஹீமைப் போல நீங்கள் தொழுகையைக் கடைபிடியுங்கள், ஜகாத் தர்மத்தை கொடுத்து வாருங்கள், ரமலான் மாதங்களில் நோன்பு இருங்கள், மேலும் ஹஜ்யாத்திரையை மேற் கொள்ளுங்கள்". இந்தச் சத்தியம் குர்ஆ னில் 22:78, 21:71-73, 2:187, மற்றும் 22:26-27 ஆகிய வசனங்களில் காணப்படுகிறது. உண்மையில், முஹம்மத் நபிக்கு இப்றாஹிமின் வழிமுறைகளைப் பின்பற்றுமாறு கட்டளையிடப் படுகிறது. (பார்க்க 16:123)

இவ்விதமாக, குர்ஆனுக்கு மாற்றமாக ஹதீஸ்களைப் பின்பற்றும் முஹம்மதியர்கள் 'என்னை எவ்வாறு தொழக் கண்டீர்களோ அவ்வாறே தொழுங்கள்' என்ற முஹம்மத் நபியின் மேல் இட்டுக்கட்டப்பட்ட இந்தப் பொய்ச் செய்தியை நம்பி முஹம்மத் நபியின் நாவிலிருந்து வந்த இறைவனின் வார்த்தைகளான அல்குர்ஆனை நிராகரிக்கிறார்கள்.

# நேருக்கு நேரு

சென்ற மே மாத இதழின் தொடர்ச்சி

பள்ளிக்கூடத்தில் ஒன்றாக படித்த பால்ய நண்பர்கள் மன்சூரும், அப்துல் ரஹீமும் நீண்ட இடைவெளிக்குப் பின்னர் தங்களது 35வது வயதில் நான்காவது முறையாக சந்தித்து உரையாடுகின்றனர். அல்லாஹ்வுக்கு பொருத்தமாகவும் சக மனிதர்களுக்கு உதவியாகவும் வாழ வேண்டும் என்பதை சிறு வயது முதல் லட்சியமாக கொண்டவர்கள்.

**மன்சூர்** : சலாமுன் அலைக்கும் நண்பர் அப்துல் ரஹீம் ஆலீம், அடடே என்ன உங்க கூட நம் பழைய நண்பர் சாதிக்பாய் வந்திருக்கார். வாங்க. வாங்க.

**அ.ரஹீம்** : வ அலைக்கும் ஸலாம் உங்களுக்கு
புத்திமதி சொல்லனும்னு என் கூட வந்திருக்கார்.

**மன்சூர்** : நட்புக்கு அழகு புத்திமதி சொல்லுவதும்தான். குர்ஆன் மட்டும்தான் மார்க்கம் என்ற எங்களுடைய கொள்கைக்கான புத்திமதிதானே, எதை வேண்டு மானாலும் தயங்காமல் நேரடியாக சொல்லுங்க சாதிக்பாய்.

**சாதிக் பாய்** : என்ன உங்கள் மதவியாபாரம் நன்றாக நடக்கிறதா? பத்திரிக்கை விற்பனை சூடுபிடித்து நல்ல வரவு என்று கேள்விப்பட்டேன் (குத்தலான வார்த்தைகள் நெருப்பாக வந்தன)

**மன்சூர்** : (தன்னுடைய நண்பரிடமிருந்து இத்தகைய நக்கலான கேள்வியை சற்றும் எதிர்பார்க்காத மன்சூர் பொங்கி வந்த கோபத்தை அடக்கி, பொறுமையை வரவழைத்துக் கொண்டு)

அறிவாளியான நீங்கள் சற்று சிந்தித்துக் பாருங்கள். மதத்தை வியாபாரமாக்குபவன் என்ன வெல்லாம் செய்வான். அவன் வியாபாரத்திற்காக விற்பனை மற்றும் விளம்பரங்களை பெற பொய் சொல்லுவான், கதைகட்டுவான். பிரபலமான அமைப்புகளை, ஜமாத்துக்களை, தலைவர்களை முகஸ்துதி செய்வான். எல்லாவற்றிற்கும் மேலாக மார்க்க விஷயங்களையே அவர்களுக்கு ஏற்றாற்போல் அனுசரித்து Compromise பண்ணுவான்

எங்கள் சகோதரர்களுடன் பேசிப் பழகிப் பாருங்கள் - மேலும் பத்திரிக்கையை படித்துப் பாருங்கள், நாங்கள் எடுத்து வைக்கும் உண்மையும், எங்கள் நல்லெண்ணமும் தெளிவாகப் புலப்படும்.

குர்ஆனுக்கு, மார்க்கத்துக்கு எதிரான அத்தனை இயக்கங்கள், சபைகள்,
ஆலீம்கள், பத்திரிக்கைகள். அவைகள் எத்தனை பெரியதாக இருப்பினும் அஞ்சாமல் அவைகளை விமர்சிக்கவும், கண்டிக்கவும் செய்கிறோம். இன்னும் ஒருபடி மேலே சொல்வதானால் மார்க்கத்துக்கு எதிரான உலக அளவில் மேற்குறிப்பிட்ட அனைத்தையும் விமர்சிக்கிறோம்.

குர்ஆனுக்கு எதிரானவைகளை இறைவனின் உதவியுடன் வெளிச்சத்திற்கு கொண்டு வருகிறோம். இதற்குப் பெயர்தான் மத வியாபாரமா? அல்லாஹ் அனைத்தையும் அறிந்தவராக இருக்கிறார். அல்லாஹ்வுக்கு அஞ்சி அடக்கமாக பேசுங்கள் நண்பரே.

**சாதிக் பாய்** : (பதிலைக் கேட்டு திகைத்து, தன்னை சமாளித்துக் கொண்டு மீண்டும் கேட்கிறார்)

ஒட்டு மொத்த முஸ்லீம்களின் கருத்துக்களுக்கும், நடைமுறைக்கும் எதிராக நீங்கள் ஏன் ஒரு கருத்தை சொல்கிறீர்கள். அதனால்தானே உங்கள் மீது சந்தேகமும், வெறுப்பும், கோபமும் ஏற்படுகிறது.

**மன்சூர்** : அனைத்து முஸ்லீம்களுக்கும் ஏன் அனைத்து மனிதர்களுக்கும் வேதம் குர்ஆன், மேலும் இறைவனே நாம் நேர்வழி அடைய அதை நமக்கு இறக்கி வைத்தார். அதற்கு எதிராக அதில் இல்லாத கட்டுக்கதைகளை எவர் சொன்னாலும் தவறுதானே நண்பரே. அவர்கள் நம்பிக்கை கொண்டிருக்கும் கட்டுக் கதைகளுக்கு ஆதாரங்களைக் கொண்டு வரட்டும் என்று அல்லாஹ் குர்ஆனில் கூறுகிறார் கவனியுங்கள்.

**சாதிக் பாய்** : ஷஹாதத் சரியில்லை என்கிறீர்கள்!, தொழுகை சரியில்லை , ஸலவாத்து கிடையாது ! ஹதீஸ்கள் இட்டுக் கட்டப் பட்டவை, இணைவைப்பாகும்! இப்படி எல்லாமே சரியில்லை என்கிறீர்கள்!. மேலும் நரகில் இருந்து ஒரு போதும் மீள முடியாது!, நபி கூட பரிந்துரைக்க

முடியாது.! குர்ஆனை நன்கு தெரிந்த மொழியில் கண்டிப்பாக படிக்க வேண்டும் ! நான்கு மாதங்களில் ஹஜ்.! முகம்மது நபிக்குப்பின் ஒரு தூதர் வருவார் என்று குர்ஆன் கூறுகிறது.!

தர்ஜீமா செய்யப்பட்ட குர்ஆனின் பல வசனங்கள் புரியாமலும், தவறாகவும் மொழியாக்கம் செய்யப்பட்டுள்ளது. 19 என்று ஒரு புதிய விஷயம், ! மன்சூர் பாய்! என்ன இதெல்லாம் தலையே சுற்றுகிறது. இப்படியெல்லாம் கூறி, புத்தகமாக வேறு வெளியிட்டால் யாருக்குதான் கோபம் வராது.? உங்களை யார்தான் விரும்புவார்கள்.? கொஞ்சம் அனுசரித்து போனால், பத்திரிக்கையும் நீங்களும் முஸ்லீம்கள் மத்தியில் பிரபலமும் செல்வாக்கும் பெற்று விடலாமே.!!

**மன்சூர்** : மார்க்கத்தில் எந்தவித அனுசரிப்புக்கும் அனுமதி இல்லை . அனுசரிப்பதால் கிடைக்கும் பிரபலமும் செல்வாக்கும் தேவையுமில்லை. இறை பொருத்தம் மட்டும் தான் தேவை. மார்க்கத்தை

**அனைத்தையும் விமர்சிக்கிறோம். குர்ஆனுக்கு எதிரானவைகளை இறைவனின் உதவியுடன் வெளிச்சத்திற்கு கொண்டு வருகிறோம். இதற்குப் பெயர்தான் மத வியாபாரமா? அல்லாஹ் அனைத்தையும் அறிந்தவராக இருக்கிறார். அல்லாஹ்வுக்கு அஞ்சி அடக்கமாக பேசுங்கள் நண்பரே.**

சொல்வதற்கான ஒரு மீடியாவாகத்தான் பத்திரிக்கை நடத்தப் படுகிறது. வியாபாரத்திற்கோ, வருமானத் திற்கோ அல்ல. குர்ஆனை எல்லோரும் படிக்க ஆரம்பித்து விட்டால் அல்லது நிதிவசதி போதவில்லை என்றால் உடனே பத்திரிக்கையை நிறுத்திக்கொள்ள தயங்க மாட்டோம்.

அனைத்தும் அறிகிற இறைவன் நம்மை கவனித்துக் கொண்டு தானிருக்கிறார். இறைவனுக்கு அஞ்சியே பேசுவோம். நடப்போம். சரி இவ்வளவு விவரமாக எங்கள் கருத்துக்களை பட்டியலிட்ட நீங்கள் கட்டுரைகளின் விளக்கங்களில் ஏன் தெளிவடையவில்லை ?

**சாதிக் பாய்** : பத்திரிக்கையா, நான் எங்கே படித்தேன். இவை எல்லாம் அனைவரும் உங்களை பற்றி பேசிக் கொள்ளும் விவரங்கள். இறைவனை 'அவர்' என்று 'ர்' விகுதியில் அழைத்ததுமே எரிச்சலில் பத்திரிக்கையை மூடி வைத்து விட்டேன் ஒன்றைக் கூட படிக்கவில்லை .

**மன்சூர்** : இப்படித்தான் சிலபேர் இறைவனை "அவர்" என்றழைப்பதை குறை கூறி அதிலேயே சைத்தானால் நிறுத்தி வைக்கப்பட்டு சத்தியத்தை, குர்ஆன் உண்மைகளை தாங்கள் செய்து வரும் இணை வைப்புகளை பத்திரிக்கையில் இருந்து அறிவதை விட்டும் தடுக்கப் படுகின்றனர். தமிழ் மொழி பெயர்ப்பில் மட்டுமே அவன் "அவர்" பிரச்சனை. அதை பிறகு புரிந்து கொள்ளலாம் என்று ஒதுக்கி வைத்து விட்டு முதலில் கருத்துக்களை ஆய்வு செய்யுங்கள்.

இறைவன் நமக்குத் தந்த இஸ்லாம் என்னும் (அடிபணிதல்) மார்க்கம் அடையாளம் காண முடியாத அளவு சிதைக்கப்பட்டு இதுதான் மார்க்கம் என இன்று பின்பற்றப்பட்டு வருகிறது. குர்ஆனைக் கொண்டு ஒப்பிட்டு ஆய்வுக் கட்டுரைகள் தருகிறோம். முன்பு உங்கள் கேள்வியில் ஐயோ தலையே சுற்றுகிறது என்ன இதெல்லாம் என்று கேட்டீர்களே. அது பற்றிய ஆய்வுக்

கட்டுரைகளை நீங்களும் குர்ஆனைக் கொண்டு அவசியம் வரிக்கு வரி படித்து ஆய்வு செய்து பாருங்கள். இதுவரை ஒருவர் கூட குர்ஆன் பற்றிய ஆய்வுகளை தவறு என்று கூறிக் கொண்டு வரவில்லை . தெரிந்து கொள்ளுங்கள். குர்ஆனைக் கூறுபவர்கள் மீது சைத்தான் மட்டுமே கோபம் கொள்வான். மேலும் தெரிந்து கொள்ளுங்கள், ஏராளமான மக்கள் ஹதீஸ்களினால் உண்டான மனக்குழப்பங்களுக்கும் இணை வைப்புகளுக்கும் விடை காண நமது பத்திரிக்கையை ஆய்வுக் கட்டுரைகளை விரும்பி ஆவலோடு எதிர்பார்க்கின்றனர். விமர்சித்து கடிதம் எழுதுகின்றனர்.

**சாதிக் பாய்** : குர்ஆனைக் காட்டிலும் ஹதீஸ்களை அதிகம் தெரிந்து அதில் அத்துபடியாக இருந்த மன்சூர் பாயா இன்று இப்படி பேசுவது. எல்லாம் இறைவனின் நாட்டம் போலும். உங்கள் இதழ்கள் ஒன்று விடாமல் படித்து குறிப்பெடுத்துக் கொண்டு சந்திக்கிறேன். தயாராக இருங்கள்.

**அ.ரஹீம்** : இவ்வளவு துணிச்சலாக நீங்கள் கருத்துக்களை கூறியும், பத்திரிக்கை நடத்தியும் வருவதைப் பார்த்தால் உங்களுக்குப் பின்னால் ஒரு சக்தி உங்களை இயக்கிக் கொண்டிருக்கிறது என்று பேசிக் கொள்கிறார்கள்.

**மன்சூர்** : உண்மைதான். ஒரு மாபெரும் சக்தி அனைத்தையும் அறிந்த ஞானமிக்க, சர்வ வல்லமை கொண்ட, இறைவன் தான் உதவி செய்கிறார். உண்மையான நம்பிக்கை கொண்டு நற்செயல் புரிவோர் அச்சப்படமாட்டார்கள். துக்கப்படவும் மாட்டார்கள். நம் அனைவருக்கும் அல்லாஹ் நேர்வழி காட்டட்டும். இன்ஷா அல்லாஹ் அடுத்த முறை சந்தித்துப் பேசுவோம். ஸலாமுன் அலைக்கும்.

**அ.ரஹீம்** : வ அலைக்கும் வஸ்ஸலாம்.

**சாதிக் பாய்** : வ அலைக்கும் வஸ்ஸலாம்.

(சந்திப்பு தொடரும்......)

# ஹதீஸ் ஆதரவாளர்களின் வாதங்களுக்கு பதில்கள்

வேதமும் ஞானமும் என்பது குர்ஆனும் ஹதீஸும் என்ற ஹதீஸ் ஆதரவாளர்களுடைய வாதத்தின் அஸ்திவாரத்தைக் குர்ஆன் தகர்த்தெறிந்ததை சென்ற இதழில் கண்டோம்.

அவர்களுடைய அடுத்த வாதம் என்னவென்றால் குர்ஆன் விவரிக்கப்பட்டதாக இல்லை, எனவே அதில் உள்ளவற்றை விளக்கவும் மேலும் குர்ஆன் முரண்பாடுகள் கொண்டதாகவும் உள்ளதால் அவற்றில் உள்ள முரண்பாடுகளைக் களையவும் ஹதீஸ்கள் தேவை. அந்த வகையில் நபி அவர்கள் கூறியதாகச் சொல்லப்படும் ஹதீஸ்களும் வஹீயே, மார்க்க ஆதாரமே என்பதாகும்.

நம்பிக்கை கொண்டவர்களைப் பொறுத்தவரை, இறைவன் கூறுவது போல் குர்ஆன் முழுமையான தாகவும், விவரிக்கப்பட்டதாகவும், முரண்பாடுகள் இல்லாததாகவும் உள்ளது என்பதை நன்கறிந்திருக்கிறார்கள். குர்ஆன் விபரமானதாக இல்லை என்பதற்கும், அது முரண்பாடுகளுடன் உள்ளது என்பதற்கும் அவர்கள் எடுத்து வைக்கும் விஷயங்கள் அவர்களுடைய நம்பிக்கை யின்மையும், அறிவின்மையையும் காட்டுகிறது.

அவற்றில், குர்ஆன் விவரிக்கப்பட்டதாக முழுமை யானதாக இல்லை என்பதற்கு அவர்கள் எடுத்து வைத்த கேள்விகளுக்கு உரிய பதில்களை கடந்த இதழ்களில் கண்டோம். மேலும், அவர்களுடைய அடுத்த அபாண்டக் குற்றச்சாட்டான குர்ஆன் முரண்பாடுகளைக் கொண்டது என்பதற்குரிய விஷயங்களை நாம் காண்பதற்கு முன் 'ஹதீஸ் தொகுப்புகளும் வஹீதான்' (இறைவனிடமிருந்து பெற்ற உள்ளுணர்வு) என்ற அவர்களுடைய வாதத்தை ஆராய்வோம்.

'ஹதீஸ் தொகுப்புக்களும் இறைவனிடமிருந்து பெற்ற உள்ளுணர்வே' என்ற வாதத்திற்கு ஆதாரமாக ஹதீஸ் ஆதரவாளர்கள் வழக்கமாக எடுத்து வைக்கும் குர்ஆன் வசனம் 53.4 ஆகும். 'ஜமாத்தே இஸ்லாம்' இயக்கத்தினர் வெளியிட்ட 'ஹதீஸ் மறுப்பாளர்களுக்கு சிந்திக்க ஓர் அழைப்பு என்ற சிறு பிரசுரத்திலும் அவ்வசனத்தையே ஹதீஸ் தொகுப்புக்களுக்கு ஆதாரமாகக் கூறியுள்ளார்.

ஹதீஸ்கள் முஹம்மத் நபி இறைவனிடமிருந்து பெற்ற ஓர் உள்ளுணர்வுதான் என்று ஒருவர் நம்பிக்கை கொண்டாலும், அவர் சிந்திக்கும் போது இவ்வாறெல்லாம் முஹம்மத் நபி கூறியிருப்பாரா, இவ்வாறெல்லாம் ஒரு நபி செய்திருப்பாரா என்ற எண்ணம் எழவே செய்யும். உதாரணமாக, முஹம்மத் நபி கூறியதாக புகாரியிலும் முஸ்லீமிலும் பதியப்பட்டிருக்கும் ஒரு செய்தி. தொழுகைக்கான அழைப்பு விடுக்கப்படும்போது சாத்தான் சப்தமாகக் காற்றைப் பிரித்து விட்டுக் கொண்டு ஓடுகிறான். (வாசகர்கள் புரிந்து கொள்ள வேண்டும். ஆம்! அதேதான்) சாத்தானின் வாயுக்கோளாறு பாங்கு சொல்லும்போது நீங்குகிறது போலும். இதை முஹம்மத் - நபி இறைவனிடமிருந்து பெற்ற உள்ளுணர்வென்பது சரியாக இருக்குமா என்று வாசகர்கள் சிந்திக்க வேண்டும். புகாரியில் பதியப்பட்டுள்ள மற்றொரு செய்தி, முஹம்மத் நபி (50 வயதுக்கு மேல்) ஒரே இரவில் அல்லது பகலில் தனது அனைத்து மனைவியரிடமும் (11 பேர்) சென்று உறவு கொண்டு விட்டு ஒரு முறை மட்டும் குளிப்பார்.

இச்செய்தியை இவர்கள் பதிவு செய்திருப்பின் நோக்கம் என்ன? இச்செய்தி நமக்குக் கூறும் அறிவுரை என்ன?

50வயதுக்கு மேல் ஒரு இரவில் அல்லது பகலில் 11 பேருடன் உடலுறவு கொள்ள முடியுமா? அதுவும் ஒரு பரபரப்பான, ஆபத்துக்கள் சூழ்ந்த ஒரு நாட்டின் தலைமைப் பொறுப்பில் இருக்கும் நிலையில்? இக்கேள்விகளை நாம் கேட்டால் நபியின் அந்தரக்க வாழ்வை நாம் விமர்சிப்பதாகக் கூறுவர். முதலில் யார் நபியின் அந்தரங்க வாழ்வில் தலையிட்டது? இந்த ஹதீஸ்கள் தான் நபியின் அந்தரங்க வாழ்வில் சேற்றை வாரி இறைக்கின்றன. நானும்

உங்களைப் போன்ற ஒரு மனிதன்தான் (18:110) என்று முஹம்மத் நபி கூறுகிறார். ஆனால் ஹதீஸ்கள் பல்வேறு வகைகளிலும், நபி நம்மைப் போன்றவர் அல்ல, அசாதாரண சக்திகள் கொண்டவர் என்கின்றன. நாம் இறைவனையும் முஹம்மத் நபியையும் நம்புவதா அல்லது அதற்கு மாறாகக் கூறும் ஹதீஸ்களை நம்புவதா? இத்தகைய செய்திகள் நிறைந்த புத்தகத் தொகுப்பை ) எவ்வாறு இவர்கள் இறைவனிடமிருந்து வந்தது என்று கூறத் துணிந்தார்கள்?

ஹதீஸ்களின் (இஸ்னாத்) அறிவிப்பாளர் வரிசைகளைப் பரீசீலிக்கும் இவர்கள் (அதுவும் முழுமையானதல்ல) அதில் கூறப்பட்டிருக்கும் (மத்ன்) விஷயங்களைச் சற்றும் ஆராய்ந்து பார்க்கவில்லை.

மேலும், குர்ஆனைப் போல் ஹதீஸ் தொகுப்புக்கள் முஹம்மத் நபியின் காலத்திலேயே எழுதப்படவில்லை. ஹிஜ்ரி இரண்டாம் நூற்றாண்டு வரை அவை பதியப்படவில்லை . எனவே ஹதீஸ்களுக்கும் முஹம்மத் நபிக்கும் எந்தத் தொடர்பையும் இவர்கள் ஆதாரத்துடன் நிரூபிக்க முடியாது.

இவர்களுடைய ஆதாரங்கள் எல்லாம் யூகங்களான காகிதச் சங்கிலிகளே.

53:4ல் அவர் இறைவனிடமிருந்து பெற்ற உள்ளுணர்வே' என்று இறைவன் கூறுவது குர்ஆனை மட்டும்தான் என்பது அவ்வசனங்களின் முன் பின் தொடர்பைப் படித்தால் (Context) எளிதில் விளங்கி விடும். அவ்வத்தியாயம் முழுவதும் முஹம்மத் நபியின் விண்ணுலகப் பயணம் குறித்தும் அங்கு அவர் கண்ட இறைவனின் அத்தாட்சிகள், மற்றும் குர்ஆன் அவர் மனத்தில் பதிக்கப்பட்டது குறித்தும் மட்டுமே கூறுகிறது. அன்றி அவ்வசனத்தில் அவர் தன் மனோ இச்சைப்படி பேசவில்லை .

இது அவர் இறைவனிடமிருந்து பெற்ற உள்ளுணர்வே அன்றி வேறில்லை என்று இறைவன் கூறுவது முஹம்மத் நபியின் அனைத்துச் சொற்களையும், செயல்களையும் அல்ல. இங்கே இது என்று கூறப்படுவது குர்ஆனைத் தவிர வேறு எதையும் அல்லவே அல்ல. ஏனெனில் முஹம்மத் நபி குர்ஆனைத் தவிர மற்ற விஷயங்களை மனோ இச்சைப்படியும் பேசினார் என்று

அதே குர்ஆன் நமக்குக் கூறுகிறது. பார்க்க 33:37, 80:1-5, 66:1 அதற்காகக் கடவுள் அவரைக் கண்டிக்கவும் செய்கிறார். அத்துடன் மக்களுக்கு முஹம்மத் நபியின் தவறுகளை, குற்றங்களை குர்ஆனில் அறிவிக்கவும் செய்கிறார். மேலும் இறைவனைச் சாட்சியாக வைத்து முஹம்மத் நபி வஹீயாகப் பெற்றது குர்ஆன் மட்டுமே என்பதை அவர் அறிவிக்கும் படியும், இறைவன் கட்டளையிடுகிறார். (6:19) குர்ஆன் அல்லாத எதையும் கூறுவதற்கு முஹம்மத் நபிக்கு உரிமை இல்லை என்றும் (10:15-18) அது அல்லாத எதையும் அவர் கூறினால் கடுமையாகத் தண்டிக்கப்படுவார் என்றும் இறைவன் எச்சரிக்கிறார். (69:40-47, 17:73-75) இத்த கைய நேரடியான, தெளிவான, வசனங்களை மறுத்து விட்டுத்தான் ஹதீஸ்களும் வஹீயே என்று கூறமுடியும் என்பதை அவர்கள் மறந்து விட்டார்கள்.

மேலும் அவர்கள் இறைவனின் வெளிப்பாடு என்பதன் இலக்கணத்தை அறியாதவர்களாக உள்ளனர். இறைவனின் வெளிப்பாடு என்பது முழுமையாகப் பாதுகாக்கப்பட்டதாக இருக்க வேண்டும். ஹதீஸ் தொகுப்புக்கள் பொய்களால் நிரப்பப்பட்டவை. அது குர்ஆனைப் போல் முழுமையாகப் பாதுகாக்கப்பட்டதாக இல்லை 15:9ல் கடவுள் கூறுகிறார்.

'நாமே இவ்வெளிப்பாட்டை இறக்கினோம், மேலும் நாமே அதனைப் பாதுகாப்போம்'

இறைவனின் வாக்குறுதிக்கேற்ப குர்ஆன் ஒரு அட்சரமும் சிதைக்க முடியாதவாறு அற்புதமான முறையில் 19 என்ற கணிதக் கட்டமைப்பின் மூலம் முழுமையாகப் பாதுகாக்கப் பட்டு உள்ளது என்பதை நாம் இப்போது அறிந்திருக்கிறோம். ஹதீஸ் தொகுப்புக்கள் பொய்கள் நிறைந்தவை என்பது அவர்களே ஒப்புக்கொள்ளும் ஒரு உண்மை. அவை பாதுகாக்கப்பட்ட நிலையில் இல்லை. எனவே நிச்சயமாக அவை வஹீ (இறைவனின் வெளிப்பாடு) இல்லை என்பது மிகத்தெளிவு. ஹதீஸ் தொகுப்புக்கள் முஹம்மத் நபி கூறியிருப்பார் என்று நம்பப்படும் யூகங்கள் அவை ஒரு போதும் சத்தியத்திற்கு நிகராகாது அல்குர்ஆன் சத்தியம். (அல்ஹக்கு) அல்குர்ஆன் மட்டுமே சத்தியம்.

கூறும் : சத்தியம் வந்தது; மேலும் அசத்தியம் அழிந்தது. நிச்சயமாக அசத்தியம் அழிந்தே தீரும். 17:81.

ஆர்.

# அர்த்தம் அனர்த்தம்

குர்ஆன் மட்டுமே மார்க்க ஆதாரமாகக் கொள்ளத் தக்கது என்று அறிவுறுத்தும் நேரடியான தெளிவான (முஹ்கமாத்தன) வசனங்கள் ஏராளமாக உள்ளன. ஆயினும் சாத்தானின் கண்டுபிடிப்புக்களான ஹதீஸ் மற்றும் சுன்னத் ஆகியவற்றை குர்ஆனுக்கு இணையாக ஆக்கி அவற்றையும் மார்க்க ஆதாரங்கள் எனபோர், அத்தகைய வசனங்களின் கருத்தைச் சிதைத்தும், திரித்தும் பொருள் கூறி மக்களை இறைவனின் பாதையிலிருந்து தடுத்து வருகின்றனர்.

இம்மாத அர்த்தம் அனர்த்தம் பகுதியில், குர்ஆன் மட்டுமே மார்க்க ஆதாரம் எனக் கூறும் இரு வசனங்களை ஹதீஸ்களின் அடிப் படையில் செய்யப்பட்ட மொழிபெயர்ப்புக்கள் எவ்வாறு சிதைந்து வைத்துள்ளன என்பதைக் காண்போம்.

இறைவன் மட்டுமே (God Alone) என்பதுதான் குர்ஆனின் அடிப்படைச் செய்தி. இறைவனின் திருப்தியை அடையும் ஒரே வழி குர்ஆனைப் பின்பற்றுவது மட்டுமே. இதனைக்

ஆனால் ஹதீஸ்களின் அடிப்படையில் செய்யப்பட்ட மொழி பெயர்ப்புக்களில், இறைவனின் ஒருமையைக் கூறும் வசனங்களைச் சிதைத்து ஏகத்துவத்தை மறைப்பார்கள். குர்ஆன் மட்டுமே மார்க்க ஆதாரம் எனக் குர்ஆனின் ஒருமையைக் கூறும் வசனங்களைச் சிதைத்து அந்த ஏகனை அடையும் வழியை மறைப்பார்கள்.

இம்மாதம் நாம் விவாதத்திற்கு எடுத்துக் கொள்ளும் 17:46, 18:27 ஆகிய இரு வசனங்களும் குர்ஆன் மட்டுமே மார்க்க ஆதாரம் என்று குர்ஆனின் ஒருமையைத் தெளிவுடன் கூறும் நேரடியான வசனங்கள் ஆகும். இவ்விரு வசனங்களுக்கும் ஹதீஸ்களின் அடிப்படையில் செய்யப்பட்ட மொழி பெயர்ப்புக்களைக் கீழே

தந்திருக்கிறோம். இம்மொழி பெயர்ப்புக்களில் (அவ்விரு வசனங்களிலும்) குர்ஆன் மட்டுமே மார்க்க ஆதாரம் என்ற சத்தியம் எவ்வளவு சாமர்த்தியத்துடன் மறைக்கப்பட்டுள்ளது என்பதைக் காண்போம். முதலில் அம்மொழி பெயர்ப்புக்களைப் படிப்போம். அடிக்கோடிடப் பட்டிருக்கும் பகுதியைக் கருத்தூன்றிக் கவனிக்கவும். அதுவே நாம் விவாதிக்கும் பகுதியாகும். கடைசியாகக் கொடுக்கப் பட்டிருப்பது ரஷாத் கலீஃபாவின் மொழிபெயர்ப்பும் அதற்குரிய தமிழாக்கமும் ஆகும். அவர்களுடைய மொழி பெயர்ப்புக்களில் புலப்படாத ஒரு உண்மை , அவர்கள் மறைக்க முயன்ற ஒரு சத்தியம் ரஷாத்தின் மொழி பெயர்ப்பில் வெளிப்படுவதைக் கவனிக்கவும்.

## ஜான் டிரஸ்டின் மொழிபெயர்ப்பு

17:46

இன்னும் அவர்கள் அதனை விளங்கிக் கொள்வதை விட்டும் அவர்களுடைய இருதயங்களின் மேல் மூடிகளையும், அவர்களுடைய காதுகளின் மீது செவிட்டுத் தனத்தையும் நாம் அமைத்து விடுகிறோம்; இன்னும் குர்ஆனில் உம்முடைய இறைவன் ஒருவனை மட்டும் நீர் குறிப்பிடும் போது, அவர்கள் வெறுப்படைந்து தம் பின்புறங்களில் (திரும்பி விரண்டவர்களாக) பின்வாங்கி விடுகிறார்கள்.

18:27

இன்னும் (நபியே!) உம்முடைய இறைவனின் வேதத்திலிருந்து உமக்கு வஹீ மூலம் அருளப்பட்டதை நீர் ஓதி வருவீராக - அவனுடைய வார்த்தைகளை மாற்றக்கூடியவர் எவருமில்லை; இன்னும் அவனையன்றி புகலிடம் எதையும் நீர் காணமாட்டீர்.

●○●

## அப்துல் ஹமீது பாக்கவியின் மொழிபெயர்ப்பு

17:46

அன்றி, அவர்களுடைய இருதயங்களிலும், அவர்கள் அதனை விளங்கிக் கொள்ள முடியாதவாறு திரையை அமைத்து, அவர்களுடைய காதுகளையும், செவிடாக்கி விடுகிறோம். திருக்குர்ஆனில் உம்முடைய இறைவன் ஒருவனைப்

பற்றியே நீர் கூறிக்கொண்டிருந்தால், அவர்கள் வெறுத்து தங்கள் முதுகுப்புறமே (திரும்பிச் சென்று விடுகின்றனர்.

18:27.

(நபியே!) வஹி மூலம் உமக்கு அறிவிக்கப் பெற்ற உம் இறைவனின் வேதத்தை நீர் (சதா) ஓதி (உபதேசித்து) வருவீராக! அவனுடைய கட்டளைகளை எவராலும் மாற்றி விட முடியாது. அவனையன்றி (உமக்கு) வேறு தஞ்சமளிப்போனையும் நீர் காண மாட்டீர்.

●○●

**அப்துல் வஹ்ஹாப் - நிஜாமுத்தீன் மன்பஈ ஆகியோரின் மொழிபெயர்ப்பு**

17:46

இன்னும் அவர்களுடைய இருதயங்களின் மீது, அதனை அவர்கள் விளங்கிக் கொள்வதை விட்டும் தடுக்கக் கூடிய) திரைகளையும், அவர்களுடைய காதுகளில் (கேட்க முடியாதபடி) சுமையையும் நாம் உண்டாக்கி விடுகிறோம்; மேலும் குர்ஆனில் உம்முடைய ரப்பை - (அவன் ஒருவனே வணக்கத்திற்குரிய நாயன் என்று) அவனைத் தனித்தவனாக, நீர் திக்ரு செய்தால், அவர்கள் வெறுப்புற்றுத் தங்கள் முதுகுப் புறங்களின் மீது புறக்கணித்துத் திரும்பி விடுகின்றனர்.

18:27

உம்முடைய ரப்பின் வேதத்திலிருந்து உமக்கு வஹீ அறிவிக்கப்பட்டதை நீர் ஓதுவீராக! அவனுடைய வார்த்தைகளை மாற்றுகிறவர் எவருமில்லை; அவனையன்றி எந்தப் புகலிடத்தை (யும்) நீர் பெற்றுக் கொள்ளவே மாட்டீர்.

●○●

**காதியானிகள் மொழிபெயர்ப்பு**

17:46

அவர்களால் அந்த (உண்மையி)னைப் புரிந்து கொள்ள முடியாதிருப்பதற்காக நாம் அவர்களின் உள்ளங்களில் பல திரைகளையும், அவர்களின் காதுகளில் செவிட்டுத் தன்மையினையும் ஏற்படுத்தியுள்ளோம். நீர் குர்ஆனில் ஏகனாகிய உம்முடைய இறைவனை நினைவு கூர்ந்தால், அவர்கள் வெறுப்படைந்து தங்கள் முதுகுகளைத்

திருப்பிக் கொண்டு சென்று விடுகின்றனர்.

18:27

உமது இறைவனின் வேதத்திலிருந்து உமக்கு வஹியின் மூலம் அறிவிக்கப் பட்டதை நீர் மக்களுக்கு எடுத்துரைப்பீராக, அவனுடைய வசனங்களை எவராலும் மாற்றி விட முடியாது. அவனையன்றி எங்கும் நீர் அடைக்கலம் பெற மாட்டீர்.

●○●

## IFT மொழிபெயர்ப்பு

17:46

எதையும் அவர்கள் புரிந்து கொள்ளாதவாறு அவர்களின் இதயங்ள் மீது உறை போட்டு விடுகிறோம். மேலும் அவர்களின் காதுகளை மந்தமாக்கி விடுகிறோம். நீர் குர்ஆனில் உம்முடைய ஏகனாகிய அதிபதியைப் பற்றி எடுத்துரைக்கும் போது அவர்கள் வெறுப்போடு முகம் திருப்பிச் சென்று விடுகிறார்கள்.

18:27

(நபியே) உம் இறைவனின் வேதத்திலிருந்து உமக்கு அறிவிக்கப்பட்டுள்ளதை (உள்ளது உள்ளபடி) எடுத்துச் சொல்வீராக! அவனுடைய வசனங்களை மாற்றுவதற்கு எவருக்கும் அனுமதியில்லை . மேலும் (யாருக்கு வேண்டியாவறு அவற்றை நீர் மாற்றினால்) அல்லாஹ்விடமிருந்து தப்பியோடுவதற்கு எந்தப் புகலிடமும் உமக்குக் கிடைக்காது.

●○●

## Pickthallன் மொழிபெயர்ப்பு

17:46

And we place upon their hearts veils lest they should understand and it, and in their ears a deafness; and when thou makest mention of thy Lord alone in the Quran they turn their backs in aversion.

18:27

And recite that which have been revealed upto thee of the scripture of thy lord. There is none who can change his words, and thou with find no refuge beside him

●○●

## Yousuf Aliceன் மொழிபெயர்ப்பு

17:46

And we put coverings over their hearts (and minds) lest they should understand. The Quran, and deafness into their ears; When thou dost com memorate thy Lord - And him alone in the Quran, They turn on their backs, Fleeing (from the Truth)

18:27

And recite (and teach) what has been revealed to thee of the Book of thy Lord; None can change this words and none wilt thou find As a refuge other than him

●○●

### 17:46க்கு ரஷாத் கலீஃபாவின் மொழிபெயர்ப்பு

We place shields around thier minds, to prevent them from understanding it, and deaf ness in their ears. And when you preach your Lord, using the Qur-An alone they run away in aversion

وَّجَعَلْنَا عَلٰى قُلُوْبِهِمْ اَكِنَّةً اَنْ يَّفْقَهُوْهُ وَفِىْٓ اٰذَانِهِمْ وَقْرًا ۚ وَاِذَا ذَكَرْتَ رَبَّكَ فِى الْقُرْاٰنِ وَحْدَهٗ وَلَّوْا عَلٰٓى اَدْبَارِهِمْ نُفُوْرًا

சரியான தமிழாக்கம் :

அவர்கள் அதைப் புரிந்து கொள்வதை விட்டு தடை செய்யும் பொருட்டு அவர்களுடைய மனங்களில் கவசங்களையும் செவிகளில் செவிட்டுத் தன்மையையும் அமைத்து விடுகிறோம். மேலும் குர்ஆனைக் கொண்டு மட்டும் உம் இரட்சகரைப்பற்றி அறிவுறுத் தினால் அவர்கள் வெறுப்படைந்து ஓடி விடுகிறார்கள்.

### 18:27க்கு ரஷாத் கலீஃபாவின் மொழிபெயர்ப்பு

You shall recite what is re vealed to you of your Lords scripture Nothing shall abrogate His Words and you shall not find any other source beside it.

وَاتْلُ مَآ اُوْحِىَ اِلَيْكَ مِنْ كِتَابِ رَبِّكَ ۚ لَا مُبَدِّلَ لِكَلِمٰتِهٖ ۚ وَلَنْ تَجِدَ مِنْ دُوْنِهٖ مُلْتَحَدًا

சரியான தமிழாக்கம் :

உமது இரட்சகரின் வேதத்திலிருந்து உமக்கு வெளிப்படுத்தப்ப பட்டதை நீர் ஓதிவரவேண்டும். அவருடைய வார்த்தைகளை எதுவும் மாற்றி விட முடியாது, மேலும் <u>அதனைத்தவிர வேறு எந்த மூலாதாரத்தையும் நீர்</u> காண முடியாது.

இப்போது நாம் 17:46 வசனத்தைப் பற்றிய இவர்களின் மொழிபெயர்ப்பை ஆய்வு செய்வோம். அதற்கு முந்திய வசனமான 17:46, 'குர்ஆனை நம்பிக்கையாளர்கள் ஓதிப் புரிந்து கொள்ளும் அதே சமயம் மறுமையில் நம் இறைவனைச் சந்திப்போம் என்ற நம்பிக்கையில்லாதவர்கள் அதிலிருந்து திரையிடப்பட்டு விடுகின்றனர்' என்று கூறுகிறது. தொடர்ந்து 17:46 அத்தகையோரின் உள்ளங்களில் முத்திரையிடப் படுவதாகவும் (அவர்களால் திறந்த மனத்துடன் இருக்க முடியாது) காதுகளில் செவிட்டுத்தனம் உள்ளதாகவும் (அவர்களால் புதிய நினைவூட்டல்களைச் செவிமடுக்க முடியாது) இறைவன் கூறுகிறார். ஆக, மறுமை வாழ்வில் (குர்ஆன் கூறும் மறுமை) நம்பிக்கை இல்லாதவர்களால் குர்ஆனைப் புரிந்து கொள்ளவோ, அதிலிருந்து பாடங்களையும் ஞானங்களையும் பெற்றுக் கொள்ளவோ முடியாது என்று நாம் தெளிவுபடுத்தப் படுகிறோம். இப்போது, ஹதீஸ்களை ஆதரிக்கும் முஹம்மதியர்கள் குர்ஆன் புரிந்து கொள்ள முடியாதது, விவரிக்கப் படாதது, முரண்பாடானது என்றெல்லாம் பழிகூறுவதன் காரணம் என்னவென்பதையும் நாம் அறிந்து கொள்கிறோம். ஆம்! உண்மையில் அவர்கள் நம்பிக்கை கொண்டிருக்கும் மறுமை வாழ்வு ஹதீஸ்களின் அடிப்படை யிலானதேயன்றி குர்ஆன் கூறும் மறுமை வாழ்வல்ல. எனவேதான் அவர்களால் குர்ஆனை, அதன் கருத்துக்களைப் புரிந்து கொள்ள முடியவில்லை.

தொடர்ந்து 17:46ன் மொழிபெயர்ப்பாக அவர்கள் அனைவரும் கூறியிருப்பதென்ன வென்றால்: 'இன்னும் குர்ஆனில் இறைவன் ஒருவனைப் பற்றி மட்டும் நீர் உபதேசித்தால் அவர்கள் வெறுப்படைந்து திரும்பிச் சென்று விடுகின்றார்கள்.'

குர்ஆன் முஹம்மத் நபி பின்பற்றிய பிரசாரம் செய்த வேதம். அதில் முஹம்மத் தன் இரட்சகர் ஒருவரை மட்டும் உபதேசித்தால் ஏன்

நிராகரிப்பாளர்கள் வெறுப்புற்றுத் திரும்பிச் செல்ல வேண்டும்? கடவுள் ஒருவர்தான் என்பது நிராகரிப் பாளர்களும், இணைவைத்து வணங்குபவர்களும் கூட ஒப்புக்கொள்ள வேண்டிய ஒரு மறுக்க முடியாத உண்மையாயிற்றே! கடவுள் ஒருவர்தான் என்று ஒப்புக்கொண்டு விட்டு பின்னர் அக்கடவுளுக்கு இணைவைப்பது தானே இணைவைப்பாளர்கள் செய்யும் செயல்? ஆக இறைவன் ஒருவர்தான் என்று கூறினால் யாரும் மறுக்க மாட்டார்கள், திரும்பிச் சென்று விட மாட்டார்கள் - ஆனால் குர்ஆனில் உள்ளபடி மட்டும் - இறைவனுக்கு எவ்விதத்திலும் யாரும் இணையானவர் இல்லை என்று, அவரைத் தவிர வேறு யாருக்கும் எந்தச் சுய சக்தியும் இல்லை என்று, யேசுவானாலும் முஹம்மதானாலும் சரி யாருடைய சொல்லுக்கு அவர் கட்டுப்பட்டவர் அல்ல என்று, அவருடன் மற்றவர்களை இணைத்து நினைவுகூர்வதும் இணைவைப்பே என்று குர்ஆனில் உள்ளபடி மட்டும் இறைவனை நினைவு கூர்ந்தால் உபதேசித்தால் இணைவைப்பவர்கள் வெறுப் புற்றுத் திரும்பி ஓடுவதுதான் நாம் காணும் காட்சி!

மேற்கண்ட ஹதீஸ்களின் அடிப்படையில் செய்யப்பட்ட மொழி பெயர்ப்புக்களில் காணப்படாத இவ்வுண்மை நடப்பு (F A C T ) ரஷாத் கலீஃபாவின் மொழிபெயர்ப்பில் தெளிவாகப் புலப்படுவதை நாம் காணலாம்.

மேற்கண்ட மொழிபெயர்ப்புக்கள் "வ இதா தகர்த்த ரப்புக ஃபில் குர்ஆனி வஹ்தஹூ வல்லவ் அலா அத்பாரிஹிம் நுஃபூரா" என்ற அரபி வாக்கியத்திற்குச் செய்யப்பட்டவை ஆகும். நாம் இவ்வாக்கியத்தை ஒவ்வொரு பகுதியாக மொழி பெயர்த்துக் காண்போம்.

| | | |
|---|---|---|
| வ இதா தகர்த்த | - | நீர் நினைவு கூர்ந்தால் |
| ரப்புக | - | உமது இறைவனை |
| ஃபில்குர்ஆனிவஹ்தஹூ | - | குர்ஆனில் உள்ளபடி மட்டும் |
| வல்லவ் அலா அத்பாரிஹிம் | - | திரும்பிச் செல்கின்றனர் |
| நுஃபூரா | - | வெறுப்புற்று |

இங்கே - ஃபில் குர்ஆனி வஹ்தஹூ - குர்ஆனில் உள்ளபடி மட்டும் என்று இருக்கும் போது ஏன் அவர்கள் தங்களுடையமொழி பெயர்ப் புக்களில் குர்ஆனில் உமது இறைவனை

மட்டும் என்று மாற்ற வேண்டும்?

அங்கே 'ரப்புக வஹ்தஹு ஃபில் குர்ஆன்' என்றிருந்தால் இவர்களுடைய மொழிபெயர்ப்பு சரி. ஆனால் அங்கே 'ரப்புக ஃபில்குர்ஆனி வஹ்தஹு' என்றே உள்ளது. இவ்வளவு தெளிவாக குர்ஆனில் உள்ளபடி மட்டும்' என்றிருப்பதை 'உமது இறைவன் ஒருவனை மட்டும்' என்று மாற்றி மொழிபெயர்த்திருப்பது ஏன்?, மறைக்கப்பட்ட சத்தியத்தைத் தொடர்ந்து மறைத்துக் கொண்டே இருக்கவேண்டும் என்ற எண்ணமின்றி இதற்குக் காரணம் வேறென்னவாக இருக்க முடியும்? இவர்கள் ஒன்றும் அரபி மொழியை அறியாதவர்கள் அல்லவே? அறிந்து கொண்டே சத்தியத்தை மறைப்பதுதான் இவர்களுடைய வழக்கம் என்று குர்ஆனும் உறுதிப்படுத்துகிறது.

மேலும் இவர்களுடைய மொழிபெயர்ப்பு மோசடியை குர்ஆனுடைய அற்புதக் கணிதக் : கட்டமைப்பு அம்பலப்படுத்துகிறது. நம்பிக்கையாளர்களின் நம்பிக்கையை அதிகப்படுத்தி அவர்களுக்கு உறுதியைக் கொடுக்கும் (17:31) 19ன் கட்டமைப்பு இந்த இடத்தில் 'குர்ஆனில் உள்ளபடி மட்டும்' என்பதே சரியான மொழிபெயர்ப்பு என்பதை எவ்வாறு உறுதி (Confirm) செய்கிறது என்பதைக் காண்போம்.

குர்ஆன் முழுவதும் 'வஹ்தஹு' (மட்டும்) என்ற வார்த்தை ஆறு வசனங்களில் இடம்பெறுகிறது. அவை 7:70, 17:46, 38:46, 40:12, 84 மற்றும் 60:4

இவற்றில் 17:46ஐத் தவிர மற்ற அனைத்து வசனங்களும் இறைவன் மட்டும்' என்று குறிப்பிடுபவை. அவை அனைத்திலும் 'அல்லாஹு வஹ்தஹு' என்றே வருகிறது. இவ்வாசகம் இடம் • பெறும் அவ்வசனங்களின் அத்தியாய எண்களையும் வசன எண்களையும் கூட்டினால் நமக்குக் கிட்டுவது 361 = 19 X 19 இவற்றுடன் குர்ஆனி வஹ்தஹு என்ற வாசகம் இடம்பெறும் 17:46ஐயும் நாம் சேர்த்தால் அது 19ன் பெருக்குத் தொகையாக வராது. இது, 17:46ல் கூறப்படுவது இறைவன் ஒருவனை மட்டும்' என்றல்ல, குர்ஆனில் உள்ளபடி மட்டும்' என்பதே சரி என்று உறுதிப்படுத்துகிறது.

அற்புதங்களை அனாயசமாகச் செய்யும் அல்லாஹ் தன்னை மட்டும் குறிப்பிடக் கூடிய வசனங்களை இங்கு19ன்கட்டமைப்பில் அமைத்து

குர்ஆன் மட்டும் என்று கூறக் கூடிய 17:46ஐ தனித்து நிறுத்தியிருப்பதும் அதே சமயம் முழுக்குர்ஆனையும் 19ன் கட்டமைப்பில் பின்னிப் பிணைத்திருப்பதும் அற்புதத்திலும் அற்புதம். எனவே இங்கே ரஷாத் கலீஃபாவின் மொழிபெயர்ப்பே சரியானது என்று நாம் அறிந்து கொள்கிறோம்.

அடுத்தபடியாக 18:26க்கு ஹதீஸ்களைப் பின்பற்றுபவர்களின் மொழிபெயர்ப்பையும், ரஷாத் கலீஃபாவின் மொழிபெயர்ப்பையும் ஒப்பிடுவோம்.

18:26ல் முதலில் 'உம்முடைய இறைவனின் வேதத்திலிருந்து உமக்கு வஹீ மூலம் அறிவிக்கப்பட்டதை நீர் ஓதி, பின்பற்றுவீராக!' என்று நபிக்குக் கட்டளையிடப்படுகிறது. இதிலே பின்பற்றப்படவேண்டிய வஹி வேதம் மட்டும்தான் என்று கூறப்படுகிறது. ஆயினும் இதற்கு மாறாக ஹதீஸ்களும் வஹிதான் என்று அவர்கள் வாதாடுகிறார்கள்.

தொடர்ந்து அவருடைய வார்த்தைகளை மாற்றும் உரிமை எவருக்குமில்லை என்று இறைவன் கூறுகிறார். ஆயினும் இதற்கும் மாறாக குர்ஆனின் சில வசனங்கள் சில வசனங்களை மாற்றுவதாகவும், சில ஹதீஸ்கள் குர்ஆனின் வசனங்களை மாற்றுவதாகவும் ஹதீஸ்களின் ஆதரவாளர்கள் கூறுகின்றனர். இதற்காக நாஸிக் (மாற்றியது) மன்ஸிக் (மாற்றப்பட்டது) என்று ஒரு பொய்த்தத்துவத்தை உருவாக்கி ஏராளமான புத்தகங்களும் எழுதி வைத்துள்ளனர்.

இவ்வசனத்தின் ஆரம்பத்தில் வஹி மூலம் அருளப்பட்ட வேதம் பற்றி இறைவன் குறிப்பிடுகிறார். தொடர்ந்து அவருடைய வார்த்தைகளான வேதத்தை மாற்றும் உரிமை எவருக்கும் இல்லை என்று கூறுகிறார்.

இந்த முதல் பகுதியில் அம்மொழிபெயர்ப்புக்களில் தவறு ஏதும் செய்து கருத்தை மாற்ற முடியவில்லை என்பதால் அதைத் தொடர்ந்து இவ்வசனத்தின் இறுதியில் தங்கள் கைவரிசையை, திறமையைக் காட்டியுள்ளனர். அவ்வசனத்தின் இறுதிப்பகுதியில் 'அவனையன்றி புகலிடம் எதையும் நீர் காண மாட்டீர் என்று மொழிபெயர்த்துள்ளனர். ஆனால் ரஷாத் கலீஃபாவின் மொழிபெயர்ப்பில் அதனையன்றி வேறு மூலாதாரம் எதையும் நீர் காண மாட்டீர் என்று மொழிபெயர்க்கப் பட்டுள்ளது. இவற்றில் எது சரியானது,

“யேசுவானாலும் சரி முஹம்மதானாலும் சரி யாருடைய சொல்லுக்கும் இறைவன் கட்டுப் பட்டவர் அல்ல என்று, அவருடன் மற்றவர்களை இணைத்து நினைவுகூர்வதும் இணைவைப்பே என்று, குர்ஆனில் உள்ளபடி மட்டும் இறைவனை நினைவு கூர்ந்தால், உபதேசித்தால் இணைவைப்பவர்கள் வெறுப்புற்றுத் திரும்பி ஓடுவதுதான் நாம் காணும் காட்சி!”

குர்ஆனுடைய கருத்துக்கு நெருக்கமானது என்பதை இவ்வசனத்தைப் படிப்பவர்கள் உணர்ந்து கொள்ள முடியும். 'மின்தூனிஹி' என்ற அரபுப் பதத்திற்கு அவரையன்றி அல்லது அதனையன்றி என்ற இரண்டு பொருள்களும் கொள்ள முடியும். ஆயினும் இங்கே 18:26 முதலில் வேதம் பற்றிக் கூறப்படுகிறது, அடுத்ததாக அவருடைய வார்த்தைகள் என்று இங்கும் வேதத்தையே குறிப்பிடப்படுகிறது. எனவே தொடர்ந்து வருவது இவ்வேதத்தை விடுத்து வேறு மார்க்க மூலாதாரம் எதையும் நீர் காணமாட்டீர் என்பதேயாகும். முன்பின் தொடருடன் (Context) படித்து சிந்திக்கும் போது இங்கும் ரஷாத் கலீஃபாவின் மொழிபெயர்ப்பே மிகவும் சரியானது என்பதை நாம் விளங்கிக் கொள்கிறோம். மறைக்கப்பட்ட சத்தியத்தை வெளிக் கொணர்ந்த இறைவனுக்கே எல்லாப் புகழும்!

## இணையத்தில் புதிய நினைவூட்டல்

**நம் புதிய நினைவூட்டல் இதழ் மற்றும் நமது ஆக்கங்கள் இணையத்தில் www.kadavulmattum.org என்ற முகவரியில் காணலாம் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறோம்.**

# இணைவைப்பு என்றால் என்ன என்று தெரியாதவர்கள்

ஷஹாதத்தில், "முஹம்மது ரசூலுல்லாஹ்" என்று இணைத்துக் கூறுவது இணைவைப்பு ஆகாது என 'முஸ்லிம் அறிஞர்கள்' அவர்களைக் கண்மூடிப் பின்பற்றும் முஸ்லிம்களை ஏமாற்றி வருகிறார்கள். இதற்கும், இட்டுக்கட்டப் பட்ட ஹதீஸ்களைக் கண்மூடிப் பின்பற்றுவதற்கும் அவர்கள் கூறும் ஒரே ஆதாரம், இறைவனுக்கும் தூதருக்கும் கட்டுப்படுமாறு கூறும் வசனங்கள் மட்டுமே. முஹம்மத் இறைவனிடம் இருந்து பெற்ற தூதுச் செய்தி குர்ஆன் மட்டுமே (6:19) என்ற உண்மையை மக்கள் நினைவை விட்டும் மறக்கடித்து விட்டனர்.

அவர்களுடைய இந்த நடவடிக்கைகள் அவர்களுடைய இரண்டு பெருந்துரதிர்ஷ்டங்களை நமக்குத் தெளிவாக்குகின்றன.

1. பொதுவாக இன்றைய பெயர் தாங்கி முஸ்லிம்கள் இறைவனை மட்டும் தனித்தவராக நினைக்க, வணங்க, ஏற்றுக் கொள்ளத் தயாராக இல்லை. - இறைவனாலும் வானவர்களாலும் (மலக்குகள்) அறிவுடைவர்களாலும் கூறப்படும் சாட்சியத்தை, 'லா இலாஹ இல்லல்லாஹ்' (கடவுளைத் தவிர யாரும் கடவுள் இல்லை ) என்ற ஓரிறைக் கொள்கைக்கான சரியான சாட்சியத்தை ஒப்புக் கொள்ள தயாராக இல்லை. அனைத்திற்கும் அவர்களுக்கு இறைவனுடன் முஹம்மதும் வேண்டும். ஆனால் இந்த "லா இலாஹ இல்லல்லாஹ்" என்ற சாட்சியத்தைக் கூறும்படியே எல்லா இறைத்தூதர்களும், நபிமார்களும் (வேதம் கொண்டு வரும் தூதர்கள்) முஹம்மத் நபி உட்பட போதித்தனர். (பார்க்க 21:25)

2. அவர்களுக்கு இணைவைப்பு என்றால் என்னவென்றே தெரியவில்லை. இணைவைப்பு என்றால், கடவுளுடன் வேறு எந்த ஒன்றையும் இணைப்பது - அது எந்த வகையில், வடிவத்தில் அமைப்பில் செய்யப்பட்டாலும் சரியே. கடவுளுடன் இணைந்து வேறு எந்தப் பெயரையும் உச்சரிப்பது கூட இணை வைப்பே என்பதைக் குர்ஆன் நமக்கு மிகத் தெளிவாக அறிவிக்கிறது. (பார்க்க 39:45, 40:10-12) நீங்கள் ஒரு விருந்துக்கு என்னை அழைத்து விட்டு, என்னுடன் என் வேலையாளையும் அழைத்து வருமாறு கூறினால், நீங்கள் என்னை தனியாக அழைத்ததாகாது. என்னுடன் வருபவர் (அரபியில் ஷரீக்) என் வேலையாள்தான் என்று நீங்கள் கூறினாலும், நீங்கள் என்னைத் தனித்து அழைத்ததாகாது. இறைவனுடன் மற்றவரை இணைத்து இவ்வாறு அழைப்பது இணைவைப்பு ஆகும்.

**"இறைவன் மட்டும் தனித்துக் கூறப்பட்டால் மறுமை வாழ்வை நம்பாதவர்களின் உள்ளங்கள் வெறுப்பினால் சுருங்கி விடுகின்றன. ஆனால், அவருடன் மற்றவர்கள் சேர்த்துக் கூறப்பட்டால், அவர்கள் திருப்தி அடைந்து விடுகின்ற னர்" (39:45).** ★★★

குர்ஆன் ஆய்வு மைய வெளியீடுகள்

முஸ்லிம்களுக்கு

# 19

# கேள்விகள்

**இன்றைய முஸ்லிம்களின் தவறான பாரம்பரிய நடைமுறைகளை சுட்டிக்காட்டி சரியான இஸ்லாத்தின் (அடிபணிதல்) பக்கம் அனைத்து மக்களையும் புதிய சகாப்தத்தை நோக்கி அழைக்கிறது**

## அறிவிப்பு

ரஷாத் கலிபாவின் ஜும்மா பயான்கள் ஆங்கிலத்திலும் தமிழிலும். ரஷாத் கலீபாவின் குர்ஆன் வகுப்பு ஆடியோ தமிழ், ஆங்கிலம், உருது, குர்ஆன் ஆடியோ. குர்ஆன் மட்டுமே மார்க்கம் ஹதீஸ்கள் மார்க்கம் அல்ல என்பது பற்றி தெளிவான குர்ஆன் வசனங்கள் கூடிய ஜும்மா பயான்கள், குர்ஆன் ஹதீஸ் இஸ்லாம் புத்தகம், முஸ்லிம்களுக்கு 19 கேள்விகள் புத்தகம், புதிய நினைவூட்டல் புத்தகங்கள் கிடைக்கும். மிகக் குறைந்த விலையில் ஆங்கிலம், தமிழ், குர்ஆன் Amazon, Flipkart மூலியமாக கிடைக்கும்.
www.kadavulmattum.org

**அளவற்ற அருளும் நிகரற்ற அன்பும் உடைய இறைவனின் திருப்பெயரால்**

# பிரகடனம்

- அனைத்து மக்களுக்கும் ஒருங்கிணைந்த மார்க்கம்.
- அல்குர் ஆன் சந்தேகமின்றி அகிலங்களின் அதிபதியிடம் இருந்து வந்ததே.
- இறுதி வேதம், அது இறைவனிடம் இருந்து வந்ததுதான் என்பதற்கான தெளிவான அத்தாட்சிகளை தனக்குள்ளேயே கொண்டதாக இருக்கிறது. அது மனித சக்திக்கு அப்பாற்பட்ட முறையில் கணித அடிப்படையில் அமைக்கப்பட்டுள்ளது.
- இது, இறைவன் தான் சத்தியம் என்பதையும், அவர் மரணித்தவரை உயிர்ப்பிப்பார் என்பதையும் அவர் அனைத்திற்கும் ஆற்றல் உடையவர் என்பதையும் நிரூபிக்கிறது.
- எல்லா இறைதூதர்களும் தந்த செய்திகளை ஒருங் கிணைத்து ஒரே செய்தியாக உலகிற்கு தருகிறது.
- முற்றிலும் இறைவனுக்கே அடிபணிதல் இறைவனை மட்டுமே வணங்கி, வணக்கத்தை கலப்பின்றி அவருக்கு மட்டுமே செய்தல்

**ஓர் உலகம்**
**ஓர்-இறை**
**ஒரே செய்தி**

Book - Post

To

*If undelivered Please return to*

SB Graphic Design And Printers
+91 824 854 1120,+91 877 825 7662